www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஆக, செப், ஆக '95
ம.க.இ.க. மாத இதழ்
விலை ரூ. 4.00



தனம்

செயற்கை விழி தந்

காரியக் குருடர்கள

படிப்பகம்

www.padippakam.com

# குப்பைக் கூடை

## தவணை முறை ஆலோசனை!

□ ஜூன் மாத உண்மை இதழில் ஒரு வாசகரின் கேள்வி இது:

''சமூக நீதி வெற்றி பெறும் இந்நாட்டில், ஏழையால் - பணம் இல்லாமல் உயர் கல்வியும், வேலை வாய்ப்பும் பெற முடியவில்லையே ஏன்? இதைத் திராவிடர் கழகம் கவனிக்குமா?

வீரமணியின் பதில்: ''ஏழைகள் பண உதவியைப் பெற ஒரு தனி கல்விநிதியை உண்டாக்கி தாராள கடன் உதவி, வட்டியில்லா கடன் அல்லது மிகக் குறைந்த வட்டியுடன் வசூலிக்கும் ஏற்பாடுடன் எளிய முறையில் உதவினால் உயர்கல்வி மிகவும் பரவலாகும். இத்தகைய கருத்துக்களை உருவாக்க தி.க. ஒத்துழைக்கும்.''

'தளபதி வீரமணி' என்று நினைத்து கேள்வி கேட்க, 'வட்டிக் கடை வீரமணி'யிடமிருந்து வருகிறது பதில். தனியுடமை அமைப்புக்கு சப்பை கட்டும் இந்த வாதத்திற்கு பெயர்தான் 'சமூகப் புரட்சி' போலிருக்கிறது.

## மாலனிஸ்டு செம்மலர்

□ குமுதம் (3.8.95) நடுப்பக்கத்தில் நடிகை விசித்திரா தனது சிவப்புச் சட்டையின் பொத்தான்களை அவிழ்த்து விட்டு மார்பைக் காட்டுகிறார். ''நம் நாட்டில்தான் சிவப்புசட்டைக்காரர்களிடையே எத்தனை பிளவுகள்?'' - என்பது அப்படத்திற்குத் தலைப்பு.

இந்த நடுப்பக்கத் திமிருக்காக, குமுதம் ஆசிரியர் மாலனை நடுத்தெருவில் நிறுத்தி செருப்பால் அடிக்க வேண்டும். ஆனால் மானங்கெட்ட 'மார்க்சிஸ்டு' கட்சியின் இலக்கிய ஏடான செம்மலரின் வெள்ளிவிழாவிற்கு சிறப்பு அழைப்பாளர் மாலன்.

## அக்கிரகாரத்துக் கழுதை!

□ குமுதம் இதழில் மணிரத்தினம் வீட்டில் வெடிகுண்டு வீச்சு நடந்தது பற்றி எழுத்தாளர் பாலகுமாரன் இப்படி, ''சுவரெல்லாம் உடைஞ்சிருக்கு, மனுஷா உடம்புல பட்டா என்ன ஆறது? வாராது வந்த மாமணி அவர். தலைமுறைகளுக்குப் பிடித்த கலைஞன். எந்தக் கலைஞனுக்கும் எதைப் பத்தியும் சொல்ல உரிமை இருக்கு. அதை பாம் போட்டு கண்டிச்சா கலைப் படைப்பே இருக்காது. பாம்பே ரியாக்ஷனுக்கு பாம்தானா பதில்? மனுஷன் என்னிக்கு இதை உணர்வான்?'' என குமுறுகிறார்.

மனிதர்கள் உணர்வோடுதான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தமிழின உரிமையென்று பேசியவர்களெல்லாம் நசுக்கப்பட்டார்களே, அப்போது 'தமிழுணர்வுக்கு தடாதானா பதில்?' என்று கத்தவில்லையே இந்த அக்கிரகாரத்துக் கழுதை!

## 'மர'த்தமிழன்

□ 21.6.95 தேவி வார இதழில், கவிஞர் சுரதாவின் கூற்று இது:

''தம் சொந்த வரலாற்றை அறிந்து கொள்ளாத தமிழர்களுக்கு அரசின் உணவுப் பங்கீட்டு அட்டை (ரேஷன்) கிடையாது என்று சட்டம் இயற்ற வேண்டும். பிற மொழிப் பெயர்களை தங்கள் பிள்ளைகளுக்கு வைத்தால் அரசு வழங்கும் உணவு மற்றும் தேவைப்பொருட்களில் (ரேஷன்) பாதியளவு வெட்டு, என்று அறிவித்து விட வேண்டும்.'' ரேசனை வெட்டுவது இருக்கட்டும். தம் சொந்த வரலாற்றைத் தமிழ்மக்கள் அறிந்து கொள்ளும் போது, ஒத்திப் பிழைத்துக் கொண்டு நாக்கைச் சுழட்டும் சுரதாவின் நாக்கையல்லவா பாதியாக வெட்டிவிடுவார்கள்.

## சந்தைக்கேற்ற உரிமை!

□ 2.7.95. இதயம் பேசுகிறது ஏடு பெண் வசனகர்த்தா - பாடலாசிரியை எனும் தலைப்பில் விசாலி கண்ணதாசன், சித்ரலேகா இருவரின் சந்திப்புத் தொகுப்பொன்றை வெளியிட்டிருந்தது. அதில் வசனகர்த்தா சித்ரலேகாவின் வசனம் இது. ''வாழ்க்கையில் வேணுமின்னா பெண்கள் அடக்க - ஒடுக்கமா இருக்கலாம். எழுத்தில் பெண் விசுவரூபமெடுக்கணும்னுதான் என்னோட ஆசை!''. வசனகர்த்தாவிற்குப் பாராட்டுக்கள். இந்த வசனத்தைப் பேச முடியாமல்தான் பல அறிஞர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண், பெண் அனைவருக்கும் ஏற்ற தத்துமல்லவா?

## 'நுண்மை அறிவு'

□ ''நெருக்கடி நிலை - ஒரு இலக்கியவாதியின் பார்வை'' எனும் தலைப்பில் இந்தியா டுடே ஏட்டில் இந்திரா பார்த்தசாரதி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

''அதே காலகட்டத்தில் நான் கல்கியிலும், கணையாழியிலும் எதேச்சாதிகாரத்தைக் கிண்டல் செய்து பராந்தகன் என்ற பெயரில் உருவகக் கதைகள் எழுதிக் கொண்டிருந்தேன். நுண்மை அறிவு ஏதுமற்ற அதிகார வர்க்கத்திற்கு இவை கண்ணில் படவில்லை''

அதிகார வர்க்கத்துக்கு மட்டுமா? வெளிப்படையாக அவசர நிலையை எதிர்த்து சிறைசென்ற பல கட்சித் தொண்டர்களுக்கும் கூடத்தான் நுண்மை அறிவில்லை. 'புனை' பெயரில் 'உருவகக்'கதை எழுதும் நுண்மை அறிவு இருந்தால் ஏன் அவர்கள் உதைப்படுகிறார்கள்?

## 'இதயம்' நோயாளிகள்!

□ இதயம் பேசுகிறது - ஏடு ஒரு செய்தியைச் சொல்ல பூரித்துப் போயிருக்கிறது. ''இந்தியாவிலேயே முதன் முறையாக ஜோக் அடித்து இதய நோயாளிகளைக் குணப்படுத்தலாம் என்கின்ற புதிய பாணியை சென்னை கீழ்பாக்கம் மருத்துவமனை பின்பற்றப் போகிறது. பிரபல இதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வி. பஞ்சமூர்த்தி ஆராய்ச்சி செய்து கண்டறிந்த இந்த சிகிச்சை முறை அறிமுகவிழா கடந்த வாரம் நடந்தது. 300-க்கும் மேற்பட்ட 'ஜோக் மழை பொழிந்த இந்த நிகழ்ச்சியைப் பார்த்தவர்களுக்கு ரொம்ப கிளு கிளுக்க வைத்தவை 'செக்ஸ்' ஜோக்குகள் தான். இருதய நோயாளிகளை குணப்படுத்த 'செக்ஸ்' ஜோக்கை மிஞ்சிய ஜோக்குகள் இல்லையோ என்ற அளவுக்கு ஜோக் மழை.

'இதய'நோயாளிகளை 'செக்ஸ்' நோயாளிகளாக மாற்றுவதில் 'இதயம் பேசுகிறது'க்கு சந்தேகம் எதுவும் இல்லை; சந்தோசம் தான்.

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 12
● குரல்: 3-5
● ஆக, செப், அக். '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 48.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்
இரா.சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை-600 031.

# ஒரு வழிப்பாதை!

தமிழ்நாட்டு முதல் மந்திரி ஜெயலலிதாவின் ''வளர்ப்பு மகன் திருமணம்'' எவ்வாறு ஆடம்பரமாகவும், ஆபாசமாகவும், அருவெறுக்கத் தக்கதாகவும் நடந்து முடிந்தது என்பதை இன்னும் ஒருமுறை தமிழ்நாட்டு மக்களுக்கு நாமும் சொல்லத் தேவையில்லை. அதை அந்த ஜெயலலிதா - சசிகலா ஆகிய ஊதாரி - உல்லாசக் கும்பலே பெருமையுடன் பீற்றிக் கொள்வதற்காக வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. ஆளும் கும்பலின் ஊதுகுழல்களாக உள்ள தினத்தந்தி - தினமலர் வகையறாக்களும் இந்தத் ''திருமண''த்தின் மூலம் தமிழ்நாட்டு மக்களைப் பிரமிப்பில் ஆழ்த்தும் விளம்பரங்கள் செய்துவிட்டன. சசிகலா குடும்பத்திடமிருந்து ஜெயலலிதாவை மீட்பது, வேறுபடுத்திக் காட்டுவது என்கிற கோணத்திலேயே இந்தத் ''திருமணம்'' குறித்து தினமணி முதலிய பார்ப்பன ஏடுகள் அம்பலப்படுத்தியிருக்கின்றன. ஜெயலலிதாவின் ஒப்புதல் இல்லாமலேயே, அவரது கவனத்துக்குக் கொண்டுபோகாமல் மறைத்தே, அவரது பெயராலேயே காரியங்கள் எல்லாம் நடக்கின்றன என்ற கருத்தை அந்த ஏடுகள் பரப்புகின்றன. ஜெயலலிதாவுக்கும் சசிகலாவுக்கும் இடையிலான ஏதேவொரு அசாதாரணமான காரணத்தாலோ, மிரட்டி நிர்ப்பந்திப்பதாலோ சசிகலாவின் குடும்பம் ஜெயலலிதாவை ஆட்டுவிக்கிறது என்றும் வதந்திகளைப் பரப்புகின்றன.

ஆனால் ஜெயலலிதாவே அடிப்படையில் ஒழுக்கம், நேர்மை, ஜனநாயக உணர்வு ஆகிய பண்புகளைக் கொண்ட பெண்மணி அல்ல. அவர் பாசிச வக்கிரம், ஆணவம், அதிகார மமதை, பழிவாங்கும் வெறி, ஆடம்பர - ஆபாச - உல்லாச - ஊதாரி வாழ்வுக்கான போதை மிக்கவர். இவற்றோடு இலஞ்ச ஊழல், அதிகார முறை கேடுகளுக்கு அஞ்சாதவர். ஏற்கனவே சாராயக் குடிவெறியனாக இருந்தவன், புதிதாக கஞ்சா போதையும் பழக்கிக் கொண்டதைப் போன்ற நிலையைத்தான் ஜெயலலிதாவுடன் சசிகலா குடும்பத்தின் சேர்க்கை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்துவந்த பிழைப்புவாத - கவர்ச்சிவாத பொறுக்கி அரசியலையே கிரிமினல் மயமாக்கியதும், ஆபாசமயமாக்கியதும் ஜெயலலிதாதான். எம்.ஜி.ஆருடன் உடன்கட்டை உறவு, சட்டப் பேரவையிலும் ஆளுநர் மாளிகையிலும் மானபங்கப்படுத்தப்பட்டதாக புகார், ராஜீவ் கொலைக்கு எதிர்க் கட்சிகள் மீது பழி போட்டுச் செய்த அவதூறு, தனது கார் மீது லாரி மோதியும் கோவில் பிரசாதத்தில் நஞ்சு வைத்தும் கொல்ல முயன்றதாகவும் பொய்ப்பழி சுமத்துதல், எதிர்த் தரப்பினர் மீது கொலைவெறித் தாக்குதல், தனது கட்சிகாரர்களை இழுக்க விபச்சாரம் - பணப்பெட்டி அல்லது ரௌடிகளை ஏவி தாக்குதல் - இவைதான் ஜெயலலிதாவின் அரசியல் ''திறமைகள்'' என்பதை ஐந்தாண்டுகளாகக் கண்டு வருகிறோம். திடீர் பணக்கார அரசியல் ரௌடிக்களையே மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பிக்கள், வாரியத் தலைவர்கள், கட்சிச் செயலர்களாக்கியுள்ளார். இவர்கள் மூலம் அன்னதானம், இசைத்தட்டு நடனம், இலவசப் பிச்சைகள் போட்டு, பிரச்சாரம் நடத்துவதும் நாள் கூலியும் பிரியாணியும் சாராயமும் கொடுத்து எதிர்க்கட்சி கூட்டங்களில் ஆபாசமாகப் புகுந்து கலைப்பதும் ஜெயலலிதாவின் அரசியல் நாகரிகமாக உள்ளது. இந்த அரசியல் போக்கின் தொடர்ச்சிதான் அவரது ''வளர்ப்பு மகன் திருமணம்''!

இவ்வளவு தூரம் கேடு கெட்ட ஒரு கழிசடைக் கும்பலின் ஆட்சி மேலும் நீடித்திருப்பதற்கான காரணம் அதன் தனிப்பட்ட திறமையோ, மக்கள் ஆதரவோ அல்ல. ஒட்டு மொத்த சமூகப் பொருளாதார, அரசியல் அமைப்பே அந்த அளவுக்கு சீரழிந்து போயுள்ளதுதான் காரணம். ஜெயலலிதா - சசிகலா கும்பலைப் போல பலமடங்கு இழி குணங்களைக் கொண்ட ஒரு பாசிச கும்பல் மத்தியில் ஆளுகிறது. ஆட்சியைப் பிடிக்க எத்தனிக்கும் மாற்றுக் கட்சிகளும் அடிப்படையில் மாறுபட்டவையல்ல. ஜெயலலிதா - சசிகலா கும்பலின் நிர்பந்தங்களினால்,- விருப்பமின்றித்தான் பெரும் தொழிலதிபர்களிடமும் பெரும் வியாபாரிகளிடமும் இருந்தும் லஞ்சம் வசூலிக்கப்படுவதாக பத்திரிகைகள் எழுதுகின்றன. இதுவும் உண்மையல்ல. நூறு கோடி ரூபாய் கொள்ளையைக் குறிவைத்து பத்துக் கோடி ரூபாயை அவர்கள் கொண்டு போய் கொட்டுகிறார்கள். ஆதாயமும் பங்கும் பெறும் அதிகார வர்க்கமும் போலீசும் ஆளும் கும்பலுக்குச் சேவை செய்வதற்கு எந்நேரமும், காத்திருக்கிறது. இதன் அப்பட்டமான வெளிப்பாடுதான் ஜெயலலிதாவின் லஞ்ச ஊழல். பல்வேறு அதிகாரமுறைகேடுகள் குறித்த வழக்குகளின் மீது உயர்நீதி - உச்சநீதிமன்றத் தீர்ப்புகள். குறிப்பாக, அவரது ''வளர்ப்பு மகன்'' திருமணத்தின் போது நடந்த அதிகாரமுறை கேடுகளைத் தடுத்து நிறுத்தும்படி கோரிய பல வழக்கறிஞர்களின் ''ரிட்'' மனுக்கள் மீதான சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு - திருமணம் மற்றும் வரவேற்பு முடியும் வரை எவ்வித பாதகமும் ஏற்படாதவாறு காலம் தாழ்த்தி, மலட்டுத் தனமான, அதேசமயம் போலியான நியாயம் வழங்கும் வகையில் அமைந்தது. அதிகாரமுறைகேடுகள் நடந்திருப்பதாக ஒப்புக் கொள்ளும் அதேவேளை அவற்றுக்கு முதல்வர் பொறுப்பல்ல என்று கூறுகிறது. வழக்குத் தொடுத்தவர்களுக்கு மட்டுமல்ல, தனக்கே என்ன பாதுகாப்பு என்று உயர் நீதிமன்ற நீதிபதியே புலம்பியிருப்பதில் இருந்து இன்றைய அரசியல் அராஜகச் சூழலைப் புரிந்து கொள்ள முடியும். இந்த வகையில் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பையே இழிந்த இறுதி நிலைக்குத் தள்ளிக் கொண்டு போய் விட்டது ஜெயலலிதா - சசிகலா கும்பல். இனிவரும் ஆட்சியாளர்கள் எவரும் இந்த ஒரு வழிப்பாதையில் தான் பயணத்தைத் தொடர முடியும்.

படிப்பகம்

www.padippakam.com







# பிராயச்சித்தம்

அப்படியா?
அப்படித்தான்.

உண்மையாகவா?
உண்மையாகத்தான்.

சாட்சி உண்டா?
கண்ணால் கண்ட சாட்சிகள்
லட்சக்கணக்கான பேர்.

''டவுனிலிருந்து
பஸ்சில் வந்து இறங்கினான்
கீழ்சாதி மாணவன்,

ஊர் கவுண்டரின் தலையில்
தன் பெட்டியைத்
தூக்கி வைத்தான்.

மறு பேச்சில்லாமல்
தலையில் சுமந்து நடந்தார்
சின்ன கவுண்டர்''.[1]

வெள்ளைக் காக்காதான்...
ஆனால் நூறுநாள் பறந்ததே!

●

வன்னியக் கவுண்டர்களை
கவுண்டர்கள் என்று
ஏற்க மாட்டார்கள் - கொங்கு
வேளாளக் கவுண்டர்கள்.

ஆனால் கட்டிநாயக்கன் பட்டியில்
வன்னியர்கள்தான் கவுண்டர்கள்.
தாழ்த்தப்பட்டவர்களைப்
பொருத்தவரை
அப்படித்தான்.

மேலிருப்பவனிடம் வினயம்
கீழிருப்பவனிடம் வெறுப்பு
சாதிப் பெருமிதத்தின் ஆன்மா
அடிமைத்தனம்.

இந்தியாவின் ஆன்மா
கிராமம்.

''ஒரு சாதியைப்
புண்படுத்தக்கூடாது என்பதுதான்
சட்டம்
பெருமைப்படுத்தக்கூடாது என்று
சட்டம் இல்லை.''

மேலும்,
''கிராமத்து மனிதர்கள்
சாதி அடையாளத்துடன் தான்
இருக்கிறார்கள்.
'மொட்டை'யாக எடுத்தால்
நேட்டி விட்டி (மண்வாசனை)
இருக்காது''

— திரைப்படத் தணிக்கைக்குழு பிராந்திய அதிகாரி, ஒரு பேட்டியில்

உண்மை தான்
மண்வாசனையில்லாமல்
கலை இல்லை.

தென் தமிழ்நாட்டிலிருந்து வீசும்
ரத்தக் கவிச்சை
மண்வாசனையுடன்
படம் பிடிக்க அனுமதி உண்டா?

கிடையாது.
எந்த சமூகத்தையும்
புண் படுத்தும் உண்மைகளைப்
பேசக்கூடாது.

புகழ்ந்துரைக்கும் உண்மைகளை
மட்டுமே பேசலாம்—

சின்னக் கவுண்டர்
பெட்டி சுமந்ததைப் போன்ற - தூய
உண்மைகளை!

''கண்ணு படப் போகுதய்யா
சின்னக் கவுண்டரே''

●

அப்படியா?
அப்படி ஓர் இடம் இருக்கிறதா?

ஒன்றுமே தெரியாதது போல
பாசாங்கு செய்கிறார்கள்.
ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்.

அப்படி ஒரு ரகசிய உலகம்
இருக்கிறது என்பதை,
சக மனிதர்கள் உமிழும் கழிவிலும்
குப்பை கூளத்திலும்தான் - அங்கே
சிலர் வாழ்கிறார்கள் என்பதை
ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்.

**அமெரிக்காவின் நகர்ப்புறச்
சேரிகள் பற்றி கறுப்பினப்
பாடகி டிரேஸி சாப்மேனின் பாடல்**

●

அப்படியா
அப்படித்தான்.

உண்மையாகவா
உண்மையாகத்தான்.

தீர விசாரித்தீர்களா?

விசாரித்தோம்
டீ குடிக்க முடியாது
கோயிலில் நுழைய முடியாது.

அதெல்லாம் சரிதான்
ஆனாலும் - இது....
நடக்கக் கூடியதா?

●

நடக்கக் கூடாததுதான்
நடந்துவிட்டது.

தனத்திற்குப்
பார்வை திரும்பிவிட்டது
காரியக் குருடர்கள் தயவில்.

கவலையில்
தோய்க்கப்பட்ட முகங்கள்
இனி
சகஜ நிலைக்குத் திரும்பலாம்.

காரியக் குருடர்கள்
இனி
ராஜபார்வை பார்க்கலாம்.

எப்படியோ...
பிரச்சினை சுமுகமாக முடிந்தது.
எல்லாம்
சரியாக இருக்கின்றன.
அது அது
அதன் அதன் இடத்தில்.

குடத்திற்குப் பதில்
குழாய்கள் —
தொந்தரவில்லை.

மண்ணில் மறுக்கப்பட்ட
உரிமை—
விண்ணிலிருந்து
வழங்கப்பட்டு விட்டது.

படிப்பகம்

www.padippakam.com

தீண்டத்தகாத
விழியின் இடத்தில் —
தீண்டத்தக்க
செயற்கை விழிகள்.

பறித்த கண்ணைத்
திருப்பிய விஞ்ஞானம்
எரித்த உடல்களை
உயிர்ப்பிக்குமானால்
**வெண்மணி**
தொல்லையிலிருந்தும்
விடுபடலாம்.

செலவைப் பற்றிக்
கவலையில்லை.
மொய் எழுதவா ஆளில்லை?

சரசுவதி பறித்ததை
லட்சுமி கொடுத்துவிட்டாள்.

கருணை மேகங்கள்...
கரன்சி மழை...
**பிராயச்சித்தம்.**

பிராயச் சித்தம்
தண்டனையல்ல,

தவறிழைத்தவன்
தன் ஆன்மாவைச்
சுத்திகரித்துக் கொள்ளும்
தவம்.

மனச்சாட்சியே
நீதிபதி!

ஆசீர்வதிக்கப்பட்ட
மனச்சாட்சிகளை
எவரும்
கூண்டிலேற்ற முடியாது.

●

கூண்டிலேற்றினார்
அம்பேத்கர்.

''தீண்டாமை என்பது
இந்துக்களின் பாவம்
எனவே
இந்துக்களே அதற்கான
பிராயச்சித்தம் தேட வேண்டும்.''
**— காந்தி**

''காலனியாதிக்கம்
வெள்ளையனின் பாவம்
அதற்கு
அவனல்லலவா பிராயச்சித்தம்
தேட வேண்டும்.
நீங்கள் ஏன் போராடுகிறீர்கள்.''
**— அம்பேத்கர்**

''ஹரிஜன முன்னேற்றத்துக்கு
20 லட்சம் ரூபாய்
மொய் எழுதியிருக்கிறோம்.
இது என் நாணயத்தைக்
காட்டவில்லையா?''
கொதித்தார் காந்தி

''நாணயம்
நாணயத்தால்
அளவிடப்படுவதில்லை
பனியாவே,

## தீண்டாமையுடன் நேருக்கு நேர்

*கட்டி நாயக்கன்பட்டி - சேலம் மாவட்டம் ஜலகண்டபுரம் அருகில் உள்ள கிராமம். பெரும்பான்மை வன்னியர்கள். சிறுபான்மை தாழ்த்தப்பட்டவர்கள் (பறயர்கள்). 'வானம் பார்த்த பூமி, பெரும் நிலவுடமை ஆதிக்கம் கிடையாது. வன்னியர்கள் கைத்தறி நெசவாளர்கள்; ஊரில் உள்ள 10 செங்கல் சூளைகளில் 9 வன்னியர் சாதியைச் சேர்ந்த முதலாளிகளுக்கு சொந்தம். ஒரு சூளை அ.தி.மு.க. வட்டச் செயலர் ராஜூ என்ற தாழ்த்தப்பட்டவருக்குச் சொந்தம். தாழ்த்தப்பட்டோர் விவசாயக் கூலிகளாகவும் சூளையில் கூலி வேலையும் செய்கின்றனர். தறி நெசவு செய்யும் வன்னியர்களை விட தங்களது பொருளாதார நிலை பரவாயில்லை என்று அவர்களே கூறுகின்றனர்.*

*பள்ளி உணவு இடைவேளையின் போது ஒருவர் தண்ணீர் மொண்டு ஊற்றுவதும் அனைவரும் கையேந்தித் தண்ணீர் குடிப்பதும் நீண்ட காலமாக உள்ள பழக்கம் தான் என்று வன்னியர்கள் கூறுகின்றனர். சுத்தம், சுகாதாரம் தான் இதற்குக் 'காரணம் என்றும் கூறுகின்றனர். எனினும் ''ஒரு தாழ்த்தப்பட்டவர் தண்ணீர் மொண்டு ஊற்ற முடியாது; வகுப்பு நடக்கும்போது மேல்சாதி மாணவர்கள் தாகமெடுத்தால் தண்ணீர் மொண்டு குடிக்கலாம்; தாழ்த்தப்பட்ட மாணவர்கள் குடிக்கக் கூடாது'' என்பதே இந்தச் சுத்தத்தின் பின்னால் உள்ள சட்டம். இந்த சட்டத்தை மீறியதே அறியாச் சிறுமியான தனம் செய்த குற்றம்.*

*அடித்த ஆசிரியர் சுப்பிரமணியன் முதலியார் சமூகத்தைச் சேர்ந்தவர் என்றும் வெளியூர்க்காரர் என்றும் கூறுகின்றனர். ''அடித்ததை நேரில் பார்த்த சாட்சிகள் கிடையாது. அடித்திருந்தாலும் அது தீண்டாமையினால் அல்ல'' என்று மேல்சாதி இளைஞர்கள் வாதிடுகின்றனர்.*

*ஊரில் உள்ள 3 டீக்கடைகளிலும் தாழ்த்தப்பட்டவர்கள் டீ குடிப்பதில்லை; மிகவும் அவசியமானால் பாத்திரத்தில் வாங்கி வந்து குடிப்பதன் மூலம் 'தனி கிளாஸ்' என்ற இழிவைத் தவிர்த்து வருகின்றனர். ஊர் மாரியம்மன் கோயிலில் நுழைய அனுமதி கிடையாது. எனினும் ஊரில் நிலவும் இந்தத் தீண்டாமைக்கும் தனத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கும் சம்பந்தமில்லையென்றும் அது ''வாத்தியாருக்கும் மாரிக்கும் உள்ள பிரச்சினை - ஊர் பிரச்சினை அல்ல'' என்றும் மேல் சாதியினர் கூறுகின்றனர். ஆனால் வாத்தியார் - மாரி மோதலில் இவர்கள் வாத்தியார் பக்கம் தான் நிற்கின்றனர்.*

*மேல் சாதியினர் பக்கம் நிற்கும் அ.தி.மு.க. செயலர் ராஜூ தீண்டாமையை நியாயப் படுத்துகிறார். வழக்கமாக உள்ளதை அநாவசியமாக கிளறி காலித்தனம் செய்வதாக குடியரசுக் கட்சி இளைஞர்களை குற்றம் சாட்டுகிறார். அவர்களது கொடிமரத்தையும் வெட்டியெறிந்திருக்கிறார்.*

*தனத்தின் கண்ணுக்கு வைத்தியம் பார்ப்பதுதான் மாரியின் முதல் அக்கறையாக இருந்திருக்கிறது. ஊர் கவுண்டர் பஞ்சாயத்து செய்து ஆசிரியரிடமிருந்து வாங்கித் தந்த தொகையில் கண் பார்வை திரும்பவில்லை. அதற்கு மேல் ஆசிரியர்களோ, ஊர்க்காரர்களோ இதைப் பற்றி அக்கறை எடுக்கவில்லை. காலனியில் புதிதாகத் துவக்கப்பட்ட பாரதக் குடியரசுக்கட்சி (பிரகாஷ் அம்பேத்கர் பிரிவு) இளைஞர்கள் தீண்டாமைப் புகார் கொடுத்த பிறகு தான் தினமணி மூலம் செய்தி வெளியுலகிற்குத் தெரிய வந்தது. அதற்குப் பின்னர் ஆசிரியர்களும் மேல் சாதியினரும் ''எதுவுமே நடக்கவில்லை'' என்று சாதிக்கத் தொடங்கிவிட்டனர்.*

*நாம் சந்தித்த பள்ளி ஆசிரியர்கள் யாரும் கருத்துக் கூற மறுத்துவிட்டனர். உள்ளூர் சாதி ஆதிக்கம் கேள்விக்குள்ளாக்கப்படுவதை மேல்சாதியினரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. பத்திரிகைகள் தங்களுக்கெதிராகச் சதி செய்வதாகக் கீருதுகின்றனர். தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதைப் போல வெறுப்புடன் பேசுகின்றனர்.*

*''தனி ஆஸ்டல் மாதிரி தனி பள்ளிக்கூடம் கட்டிக் குடுத்துரட்டும் சார். எதுக்கு தொல்லை?'' என்றார் ஊர் கவுண்டரின் தம்பி.*

*தனத்திற்கு கண் பார்வை திரும்பி விட்டது. மாரி குடும்பத்துடன் ஊரைக் காலி செய்து சென்னைக்குப் போய் விட்டார்.*

***நேரில் சென்று திரட்டிய தகவல்***

படிப்பகம்

www.padippakam.com

உன் பணத்தை
பெட்டியில் பூட்டு.
தீண்டாமையைக் கடைபிடிப்பவன்
காங்கிரசு உறுப்பினராக முடியாது
என்று
அறிவித்துக் காட்டு''
என்றார் அம்பேத்கார்.

காந்திக்கு மட்டுமா
அந்தக் கேள்வி?
காங்கிரசில் மட்டுமா
அந்தக் கயமை?

தனத்துக்கு
மொய் எழுதிய
தனவான்கள் பதில் சொல்லட்டும்!

தன்னைக் கூண்டிலேற்றிய
இழி மக்களை
'ஆசீர்வதிக்கப்பட்ட மனசாட்சிகள்'
மன்னிப்பதில்லை.

மகாத்துமாவின்
ஆத்ம சுத்தியை
அம்பேத்கர் சந்தேகித்தவுடனே
மகாத்துமாவின்
அந்தராத்மா
சதியில் இறங்கியது.

சிறைக்கு வெளியிலிருந்த
அம்பேத்காரை
சிறைக்கு உள்ளிருந்தே
கைது செய்தார்
காந்தி [2]

●

ஊர் கவுண்டர்
கொடுத்த காசை வாங்கிக் கொண்டு
விழுந்து கும்பிட்டிருந்தால் - மாரியுடன்
சமாதான சகவாழ்வு.

''வாத்தியார் மீது புகார் கொடுத்து
நீ....
எங்களை
தண்டிக்க முயன்றால்...''

காயை எப்படி நகர்த்த வேண்டும்
என்பதை
அவர்கள் அறிவார்கள்.

மொய் எழுதிய
இரக்கம்,
செயற்கை விழி தந்த
செயற்கை இரக்கம்,
இதோ, தனது
இயற்கையான கூட்டாளிக்கு
கண்ணீர் வடிக்கிறது.

இரக்கம்
தன்னிரக்கமாகிவிட்டது.

கிளிசரின் கண்ணீருக்குப் பதில்
இதயத்தின் அழுகுரல்.

ஆசிரியரைத்
தண்டிக்க வேண்டாம் - என்ற
மாரியின்

**நடக்கக் கூடாதுதன்
நடந்து விட்டது.
தனத்திற்குப்
பார்வை திரும்பிவிட்டது
காரியக்குருடர்கள் தயவில்
கவலையில்
தோய்க்கப்பட்ட முகங்கள்
இனி
சகஜ நிலைக்குத்
திரும்பலாம்.**

'பெருந்தன்மையை'
உச்சிமோந்தது ஆனந்த விகடன்.

''அவர் என்னிடம்
மன்னிப்புக் கேட்க வேண்டும்''
என்று மாரி சொன்னவுடன்

''ஆசிரியர்
குற்றவாளிதானா'' என்று
ஐயம் எழுப்புகிறது — இந்தியா டுடே

காருண்யத்தின் விழிகளில்
சிவப்பேறி விட்டது.

இலக்கியக் கலகத்துக்கு
இடம் தரலாம் - அது மலர்.

## சொன்னது நீ தானா?

''தீண்டாமை என்ற கொடுமை எங்கு நடந்தாலும் உறுதியாக எதிர்க்க வேண்டும். எவர் செய்தாலும் கண்டிக்கப்பட வேண்டும்.''

தனம் கண் பறிப்பைக் கண்டித்து காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரர் பேட்டி - (தினமணி 1.8.95)

— ● —

''தீண்டாமை க்ஷேமகரமானது (மிகவும் நல்லது) என்ற எண்ணம் நமக்கு இருப்பதால்தான் நாம் இப்படி அதற்கு (ஆதிசங்கரரின் மனீஷா பஞ்சகம் என்ற நூலுக்கு) அர்த்தம் செய்கிறோம். தீண்டாமை போயிற்று என்று சொல்வது தவறு... இப்போதுள்ள சீர்திருத்தக்காரர்கள் 'நீங்கள் கலப்பு கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டாம். தீண்டாமையை மட்டும் விட்டு விடுங்கள்'' என்று சொல்கிறார்கள். அடுத்தபடி அதுவும் பரவாயில்லை என்று யாராவது சொன்னால் அதையும் சரி என்று சொல்வார்கள்.. நம்மை மீறி ஒரு அதர்மம் உலகில் ஏற்பட்டு, அதைத் தடுக்க முடியாமல் போய்விட்டால் அந்தக் காரணத்தைக் கொண்டு அது தான் நியாயம் என்று சொல்வது தப்பு''

- செத்துப் போன சீனியர் சங்கராச்சாரியின் அருள் உரையிலிருந்து.

சிறப்பு மலரானாலும்
காகித மலர்.

இது வாழ்க்கை.
வண்ண ஜாலங்களுக்கு வேலையில்லை
இது
தெளிவான
கறுப்பு வெள்ளை.

இங்கே சட்டத்தின் மொழியில் மட்டுமே
பேச முடியும்.

நிரபராதிகள் தண்டிக்கப்படுவது
சமூக அவலம்

ஒரு நிரபராதி
தண்டிக்கப்படக்கூடாது என்பதே
நீதியின் கவனம்.

கோயில், டீக்கடை,
சுடுகாடெல்லாம்
சுற்ற வேண்டாம்.

குற்றம் நடந்ததாகக்
கூறப்படும்
வகுப்பறையைப் பற்றி மட்டும்
பேசுவோம்.

ஆசிரியர்
குற்றவாளி என
சந்தேகத்திற்கிடமின்றி
நிரூபிக்க முடியுமா?

●

ஆக,

இந்தியாவையே அதிரச் செய்த
கட்டி நாயக்கன்பட்டி
'அதிசயம்'
சாதித்தது என்ன?

தனத்துக்கு ஒரு
சிந்தெடிக் (செயற்கை) விழி
அந்தப் பள்ளிக்கு - ஒரு
சின்டெக்ஸ் தொட்டி

ஆசிரியரின் கைது?
சீப்பில் சிக்கிய முடி.

●

**மருதையன்**

1. சின்னக் கவுண்டர் திரைப்படத்தில் ஒரு காட்சி.
2. 1932-இல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு (சீக்கியர், இசுலாமியர்க்கு இருந்ததைப் போலவே) தனித் தொகுதி வேண்டுமென அம்பேத்கர் கோரினார். அப்போது ஏரவாடா சிறையிலிருந்த காந்தி இதை எதிர்த்து அங்கிருந்தபடியே சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கினார். காந்தியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் நாடு முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்கள் மேல் தாக்குதல் நடக்கும் என்பதால் அம்பேத்கர் வேறு வழியின்றி காந்தியுடன் சமரசம் செய்து கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

# ரஜினி அரசியல் நுழைவு:
# சட்டம் ஒழுங்கே மதமாக

**மருதையன்**

*"இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் பிரான்சு ஆசைநாயகிகளின் ஆட்சியை அனுபவித்தது; ஆனால் எந்தக் காலத்திலும் ஆசை நாயகர்களின் ஆட்சி இருந்ததில்லை"*

**கார்ல் மார்க்ஸ்**
**பதினெட்டாம் புரூமேர் கட்டுரையில்**

அப்படிப் பார்த்தால் நமக்கு ஆசை நாயகர் ஆட்சியும் புதிதல்ல. வெறும் துருப்புச் சீட்டாக மட்டுமே தாங்கள் பயன்படுத்த எண்ணிய 'ராஜா', உண்மையான ராஜாவாகிவிடக் கூடிய அபாயத்தை எண்ணி கலங்கிக் கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சிகள். அரசியலை பிழைப்புக்கான தொழிலாக ஒழுங்கமைத்துத் தருவதில் எம்ஜியாருக்குத் துணை நின்ற அவரது கணக்குப்பிள்ளை, ஆர்.எம்.வீ., கக்கத்தில் பையுடன் தயாராகிவிட்டார். ஒரு கேலிச்சித்திரக்காரர் வரைந்தது போல "கணக்குப் பிள்ளை வந்துவிட்டார் - கடையைத் திறக்க வேண்டியதுதான்".

ரஜனி அரசியலில் 'குதிப்பாரா?' ரஜனியே அடிக்கடி சொல்லிவருவது போல அது அவருக்கே தெரியாது. எனவே நமக்குத் தெரியவும் நியாயமில்லை. 'குதிப்பது' பற்றி நமக்குத் தெரியாவிட்டாலும் எதிர்க்கட்சிகள் அவரைப் பிடித்துத் 'தள்ளிவிட்டது' பற்றி நமக்குத் தெரியுமென்பதால் அதைப் பார்ப்போம்.

ஜெ. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாக பாட்ஷா படவிழாவில் ரஜனி பேசியதை அதிமுக அமைச்சர்கள் கண்டித்தனர். கைது செய்துவிடவில்லை; வழக்கு எதுவும் போட்டுவிடவில்லை.

அந்தப் பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்காததற்காக ஆர்.எம்.வீயையும் கண்டித்தனர். 'அரசியலில் நத்தி பிழை அல்லது சினிமாவில் எத்திப் பிழை - ஏதாவதொன்றுக்கு விசுவாசமாக இரு' என்று எச்சரித்தனர். கொள்ளைக் கூட்டத்திற்கும் ஒழுக்கவிதிகள் உண்டு. அதைத்தான் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

எதிர்க்கட்சிகள் என்று தம்மைத் தாமே கம்பீரமாக அழைத்துக் கொள்ளும் பிராணிகள் உடனே என்ன செய்தன? காங்கிரசில் சேருங்கள் என்றார் குமரி ஆனந்தன்; உயிர் கொடுப்பேன் என்றார் குப்புசாமி எம்.பி; ரஜனிக்கே பேச்சுரிமை இல்லையா என்று குமுறினார் வை.கோ.

ஜெ. அரசை சொந்தக்காலில் நின்று எதிர்க்க வக்கற்ற தலைவர்கள், தமது கோழைத்தனத்தை மறைக்க 'ரஜனியையே விமரிசிப்பதா?' என்று ரசிகர்களுக்குக் கொம்பு சீவினார்கள். விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட 'கடவுளாக' ரஜனியை உயர்த்துவதன் மூலம், தங்களது சொந்த உரிமையையும் ரசிகர்களுக்குக் காணிக்கையாகச் செலுத்திவிட்டார்கள்.

இந்த அளவிற்கு எதிர்க்கட்சிகளைப் பரவசத்திலாழ்த்திய ரஜனியின் உரிமை முழக்கத்தை வாசகர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

"துப்பாக்கியால் சுடுபவர்கள், வெடிமருந்தைப் பயன்படுத்துபவர்கள் ஆதாரத்தோடு சிக்கினால் வேறு விசாரணையின்றியே தூக்கில் போடுங்கள். ஒரு பத்து பேரைத் தூக்கில் போட்டால் எல்லாமே சரியாகிவிடும்... நிரபராதியான அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை உடனே தடுத்தாக வேண்டும். பஞ்சாப் தீவிரவாதிகளின் கொட்டத்தை போலீசு அதிகாரி கில் அடக்கவில்லையா? அவரிடம் முழு அதிகாரமும் தரப்பட்டது. நம்ம போலீசு யாருக்கும் கம்மி அல்ல; உடனே அவசர சட்டம் போட்டு போலீசுக்கு முழு அதிகாரமும் தந்தால்தான் வெடிகுண்டுக் கலாச்சாரம் ஒழியும்"

> **"ஒரு குடிமகன் என்ற முறையில் தனது கருத்தைக் கூற ரஜனிக்கு சுதந்திரம் இல்லையா என்று முழங்குகிறார்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள். கருத்துரிமை பெற்ற ரஜனியோ "போலீசுக்கு சுதந்திரம் கொடு!" என்று கர்ச்சிக்கிறார்."**

ஊழல், விலைவாசி உயர்வு, போலீசு அராஜகம் போன்ற பிரச்சினைகள் எதையும் ரஜனி எழுப்பவில்லை. தனது சக வியாபாரியான மணிரத்தினம் எனும் கோயபல்சின் பிரச்சார உரிமைக்கு ஆபத்து ஏற்பட்டதால் 'மக்களின் உரிமைகள் உடனே ரத்து செய்யப்பட வேண்டும்' என்று முழங்கினார், அவ்வளவுதான்.

"மனித உரிமை மீறலில், சட்டவிரோதமாக மக்களைச் சுட்டுக் கொல்லுவதில் நாட்டிலேயே முதலிடம் பஞ்சாப் போலீசுக்கு; இரண்டாவது இடம் தமிழக போலீசுக்கு என்று கூறியிருக்கிறது தேசிய மனித உரிமைக் கமிசன். கில்லுக்குத் தரப்பட்ட அதிகாரத்தைத் தேவாரத்திற்கும் கொடுத்து, பஞ்சாப் தட்டிச் சென்ற முதலிடத்தைத் தமிழகம் கைப்பற்ற வேண்டும்" என்று கோரினார் - அவ்வளவுதான்.

தேசிய வெறி, ஆன்மீகக் கிறுக்கு, பாசிசத்திமிர் ஆகிய மூன்றும் கலந்த மூளையிலிருந்து வெளி வந்த உரை இது. மூளை இருக்க வேண்டிய இடத்தையும் கொழுப்பு ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் ஜெ.கும்பலுக்கு இந்த உரையின் சூட்சுமம் பிடிபடவில்லை போலும்!

"விசாரணை இன்றி தூக்கில் போடு "போலீசுக்கு முழு அதிகாரம் கொடு" - பாசிஸ்டுகளின் மனதிற்கினிய இந்த கொள்கை முழக்கங்களைக் கேட்டுப் புல்லரித்துப் போன அத்வானி, "ரஜனி புதுக் கட்சி துவங்கினால் கூட்டு சேருவோம்" என்று உடனே அறிவித்திருப்பதிலும், எஸ்.ஆர்.பி காங்கிரசுக்கு அழைப்பதிலும் வியப்பில்லை.

ஆனால் ஜெ. ஆட்சியை எதிர்க்கின்ற பிற கட்சிகளும் ரஜனியின் பின்னால் செல்வதன் மர்மம் என்ன? ரஜனி ரசிகர்களின் ஓட்டைப் பெறுவதற்கான தந்திரமா? அல்லது 'இந்தியா டுடே' தனது தலையங்கத்தில் அங்கலாய்த்துக் கொள்வது போல, இது அரசியல் கட்சிகளின் சித்தாந்த ஒட்டாண்டித்தனமா? இவையும் காரணங்கள் என்று கூறலாமேயொழிய இவையே காரணமல்ல. ரஜனியின் அரசியல் சித்தாந்தமும், அவருடைய உரிமைக்குக் குரல் கொடுக்கும் கட்சிகளின் சித்தாந்தமும் அதிசயிக்கத்தக்க ஒற்றுமையைக் கொண்டிருப்பதே முக்கியக் காரணம்.

ஜெ ஆட்சியை நீக்கக் கோரும் அனைத்துக் கட்சிகளும் முன் வைக்கும் பிரதான பிரச்சினை "சட்டம் ஒழுங்கு சீர்குலைவு"

ஆர்.எஸ்.எஸ். காலிகள் முஸ்லீம்களைக் கொன்றால் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை; ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வீசப்பட்டால் அதுவும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினைதான்.

காவல் நிலையத்தில் கற்பழிப்பு நடந்தால் சட்டம் - ஒழுங்கு; அந்தக் காவல் நிலையத்தின் மீது மக்கள் கல்லெறிந்தாலும் சட்டம் ஒழுங்கு.

சிறையிலிருந்து விடுதலைப் புலிகள் தப்பினால் சட்டம் - ஒழுங்கு; கிரிமினல்கள் தப்பினாலும் சட்ட ஒழுங்கு.

அதிமுக கோஷ்டிகள் ஒருவர் மீது ஒருவர் குண்டு வீசிக் கொண்டால் சட்ட ஒழுங்கு; திமுக வழக்கறிஞரை அதிமுக குண்டர்கள் தாக்கினாலும் சட்ட - ஒழுங்கு.

படிப்பகம்

www.padippakam.com

வீரப்பனால் போலீசார் சிலர் கொல்லப்பட்டால் சட்ட ஒழுங்கு - போலீசால் மலைவாழ் மக்கள் கொல்லப்பட்டாலும் சட்ட ஒழுங்கு.

முகமூடிக் கொள்ளை, பிக்-பாக்கெட், நீதி மன்றத்திற்குள் கொலை இன்ன பிற.. இன்ன பிற - எதிர்க்கட்சிகளின பார்வையில் அனைத்தும் சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளே.

முரண்பட்ட பிரச்சினைகளில், அவை ஒவ்வொன்றுக்கும் உரிய அரசியல் தன்மையையும், தனித்துவத்தையும் பின்னுக்குத்தள்ளி அனைத்தையும் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையாகக் காட்டுவதன் மூலம் 'சட்டம் - ஒழுங்கு' என்ற சொற்றொடரையே, மதத்தின் புனித நிலைக்கு உயர்த்திவிட்டன எதிர்க்கட்சிகள்.

சட்டப்பிரிவு - 356 இன் கீழ் ஆட்சிக் கலைப்புக்கு வழி செய்வதற்கான தந்திரமல்ல இது. மக்கள் நல அரசு என்ற முகமூடியை இனிமேலும் சுமக்கத் தேவையில்லை என்ற உலக வர்த்தகக் கழகத்தின் ஆணையும், இந்திய ஆளும் வர்க்கங்களின் விருப்பமும், இக்கட்சிகளின் கொள்கையும் பிசிறின்றி ஒன்றுபடுகின்றன.

நிலவுகின்ற சமூக ஒழுங்கை, உருவாகி வருகின்ற 'புதிய சமூக ஒழுங்கை', அதற்கேயுரிய ஏற்றத்தாழ்வுகளுடன் காவல் காக்கும் அடியாள் படையே அரசு. அது அவ்வாறு இருந்தால் போதுமானது; அநாவசியமான பொறுப்புகளை அரசு தார்மீக ரீதியில் கூட ஒப்புக் கொள்ளத் தேவையில்லையென்பதே இந்தப் புதிய நியதி.

இந்த நியதியின் வெளிப்பாடுதான் தூய சட்டம் - ஒழுங்கு வழிபாடு. எனவே 'அரசியலற்ற நல்லொழுக்கவாதி'யான ரஜனியிடம் அரசியல்வாதிகள் சரணடைந்ததில் வியப்பில்லை.

எனவே, ரஜனி முதல்வராவாரா என்ற கேள்விக்கு, 'முதல்வராக விரும்புவோரெல்லாம் ரஜனியாக இருக்கிறார்கள்' என்பதுதான் விடை.

அரசியல் தலைவர்களுடன் ரஜனியை ஒப்பிடுவதை சீரணிக்க இயலாதவர்கள், வேண்டுமானால் தொண்டர்களை ரசிகர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கட்டும். தலைவர் வழிபாடு, அரசியலறிவு, அரசியல் - பண்பாட்டு ரசனை ஆகிய அனைத்திலும் ரஜனி ரசிகனையும் கட்சித் தொண்டனையும் பிரிக்கும் எல்லைக் கோடு மிகப் பலவீனமாகவே இருப்பதைக் காண முடியும்.

செயல்பாடுகளும் அவ்வாறே. இரத்த தானம், அன்ன தானம், கண் தானம், தண்ணீர்ப் பந்தல், போதை எதிர்ப்பு, உள்ளூர்க் கோயில் திருவிழாக்களைப் பொறுப்பேற்று நடத்துதல் போன்ற ரசிகர் மன்றங்களின் நற்பணிகளைத்தான் டைபி (DYFI) போன்ற 'துடிப்பான' இளைஞர் அமைப்புகளும் ஆற்றி வருகின்றன.

மேற்கூறியவையெல்லாம் நற்பணிகள் என்றால் 'தீய பணிகள்' எவை? அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் தீயவையே.

''போராடாத எதிர்க்கட்சியே பொறுப்புள்ள எதிர்க்கட்சி. எதற்கெடுத்தாலும் போராட்டம், ஊர்வலம், மறியல், கடையடைப்பு நடத்தி சகஜ வாழ்க்கையையும் ஒழுங்கையும் குலைப்பவர் எப்படி பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக முடியும்?'' - இது ஆளும் வர்க்கப் பத்திரிகைகள் உருவாக்கியுள்ள கருத்து.

ரஜனி குறிப்பிடுகின்ற, எந்த அரசியல் வம்பு தும்புக்கும் போகாத 'அப்பாவி பொது ஜனம்' அதாவது சமநிலை குலையாத 10 முதல் 5 வாழ்க்கையை லட்சியமாகக் கொண்ட நடுத்தர வர்க்கம், இக்கருத்தை முழுமனதுடன் ஆமோதித்து வரவேற்கிறது. ஆளும் வர்க்கத்தின் நலனும் நடுத்தர வர்க்கத்தின் அற்பத்தனமும் கூடிப் பெற்ற இந்த 'ஒழுங்கு' என்ற தேவதை, ஒழுங்கு மீறலின் வெளிப்பாடாக விளங்க வேண்டிய போராட்டங்களையும் இப்போது 'ஒழுங்கு' படுத்திவிட்டது. பல சந்தர்ப்பங்களில் இத்தகைய ஒழுங்கான போராட்டங்களை, சம்பிரதாயப்படி நடத்தி வைக்க வேண்டிய புரோகிதப் பணியை காவல் துறை மேற்கொண்டு வருகிறது.

> ''சில ஓய்வு பெற்ற அரசியல்வாதிகள், தினசரிகளின் நடுப்பக்கத்தில் காமராஜின் வருகையைக் கனவு காண்கிறார்கள். முதல் பக்கமோ ரஜனியின் வருகையை அறிவிக்கிறது.''

சட்டமன்றத்தில் வெளி நடப்பு, நீதிமன்றத்தில் மனு, பத்திரிகைக்கு காரசாரமான அறிக்கை, தவிர்க்க முடியாத பட்சத்தில் ஒரு 10 முதல் 5 வரையிலான போராட்டம். இந்தச் சட்டத்தை மீறித் தெருவில் இறங்குகின்ற எந்த எதிர்க்கட்சியும் அமைதியைக் குலைக்கும் தீவிரவாதியாகவே சித்தரிக்கப்படும். பட்டுத் 'திருந்திய' கட்சிக்கு பா.ம.க. ஒரு உதாரணம்.

இது மட்டுமல்ல; கட்சி ஊர்வலத்திற்குத் திரட்டப்படும் கூலிப் பட்டாளத்திற்கும், படப்பிடிப்புக்குத் திரட்டப்படும் துணை நடிகர் கூட்டத்திற்கும் சம்பள விகிதத்தைத் தவிர வேறு எதில் வேறுபாடு?

லட்சக் கணக்கில் உறுப்பினர் எண்ணிக்கைக் கணக்கு காட்டும் எந்தக் கட்சியும் தங்கள் உறுப்பினர்களில் சில ஆயிரம் பேர் சேர்ந்தாற் போல ஒரு மாதம் சிறையிலிருக்கத்தக்க போராட்டம் எதையும் அறிவிக்கும் நிலையில் இல்லை. அல்லது நாள் வாடகைக்கு கிடைப்பதுபோல மாத வாடகைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை என்பதும் காரணமாக இருக்கலாம்.

இருப்பினும் உள்ளடக்கத்தில் போர்க் குணம் வீழ்ந்து வருவதற்கு நேர் எதிர் விகிதத்தில் வடிவம் போர்க்குணம் பெறுகிறது. சீருடை அணிந்த பாண்டு வாத்திய கோஷ்டிகளும் தற்கொலைப் படைகளும் தன்முன்னே அணிவகுத்துச் செல்லும் போது, வாடகைச் செலவுக் கணக்கை ஒரு கணம் மறந்து, புனித ஜார்ஜ் கோட்டையின் சுதந்திர தின அணிவகுப்பைப் பார்வையிடும் கனவு நிலைக்கு தலைவர்கள் ஆளாகிவிடுகிறார்கள்.

அரசியல் வியாபாரிகளுக்குள்ள கனவு காணும் உரிமை, கனவு வியாபாரிகளுக்கும் உண்டு என்பதால் ரஜனியும் கனவு காண்கிறார். 'ரசிகர் மன்றங்கள் கட்சிக் கிளைகளாகவும், ரசிகப் பெருமக்கள் வாக்காளர்களாகவும், பாட்ஷா முதல்வராகவும் மாற முடியாது' என்று அவர் அறிந்த அரசியல் வரலாறு நிருபிக்கவில்லை.

காற்றினால் அடித்துச் செல்லப்பட்ட குப்பையானாலும் அது குன்றின் மேல் இருத்தப்படும் போது தன்னை தீர்க்கதரிசியாகக் கருதிக் கொள்வது தவிர்க்கவியலாதது. ''விசாரணையின்றித் தூக்கில் போடு'' ''போலீசுக்கு சுதந்திரம் கொடு'' என்ற ரஜனியின் குரலை மலைகள் மட்டுமல்ல, விசுவாசிகள் கூட்டத்தில் கலந்திருக்கும் கட்சித் தலைவர்களும் அல்லவா எதிரொலிக்கிறார்கள்!

ஒரு குடிமகன் என்ற முறையில் தனது கருத்தைக் கூற ரஜனிக்கு சுதந்திரம் இல்லையா என்று முழங்குகிறார்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள். கருத்துரிமை பெற்ற ரஜனியோ ''போலீசுக்கு சுதந்திரம் கொடு!'' என்று கர்ச்சிக்கிறார்.

இதுவரை கண்ட ஆட்சிகளில் இந்த ஆட்சியில்தான் சுதந்திரத்தின் முழுப் பொருளையும் உணர்ந்ததாக மன நிறைவு கொண்டிருந்த காவல் துறையினர், இதற்கு மேலும் நமக்குக் கிடைக்கவிருக்கும் சுதந்திரங்கள் என்னவாக இருக்கும் என்று குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இளமைக்கால நினைவுகளால் அலைக்கழிக்கப்படும் கிழவனைப் போல, சில ஓய்வு பெற்ற அரசியல்வாதிகள், தினசரிகளின் நடுப்பக்கத்தில் காமராஜின் வருகையைக் கனவு காண்கிறார்கள். முதல் பக்கமோ ரஜனியின் வருகையை அறிவிக்கிறது.

நடுப்பக்கம் கனவு வியாபாரத்திற்கு, முதல் பக்கம் கனவு வியாபாரிகளுக்கு.



படிப்பகம்

www.padippakam.com

# மண்ணைத் தொடும் வேர்கள்

✪ துரை. சண்முகம்

"இந்த ஏரியாவுக்குப் பேருதான் அண்ணாநகர். இந்த கட்டிடம்தான் மொதலாளிக்கு கட்டிகிட்டு இருக்குற ஊடு. நீங்க முன்னால இருக்குற இந்த எடத்துல தங்கிங்குங்க, பூட்டு சாவியெல்லாம் இருக்கு. உள்ளாறயே அடுப்பும் இருக்கு. மொதலாளிகிட்டே நேத்தியே உங்களப் பத்தி சொல்லிட்டேன். கொஞ்ச நேரத்துல வருவாரு. நான் சிமெண்டு மூட்டை எடுக்கப் போகணும், போயிட்டு அப்புறம் வாரேன், நீங்க அவுரு கேக்கறதுக்கு பதில் சொன்னா போதும், மத்த விசயமெல்லாம் நான் பேசிக்குறேன்" கைக் கடிகாரத்தை பார்த்த வண்ணம் பேச்சை வேகமாக முடித்துக் கொண்டு புறப்பட்டான் செல்வம்.

புது வீட்டிற்குள் தயக்கத்துடன் அடியெடுத்து வைத்தாள் முத்தம்மா. சிமெண்ட் பூச்சு இல்லாமல் செங்கல் சிரிப்பில், ஆஸ்பெஸ்டாஸ் சீட்டின் அனல் மணக்க அவர்களை புது வீடு வரவேற்றது. "தோ லைட்டு" செந்திலுக்கு விளையாட்டாய் ஒரு முறை அணைத்துப் போட்டு காண்பித்தான் இரத்தினம் 'முத்தம்மா, மொதல்ல வீட்டக் கூட்டி கழுவி வுட்டுடு, பெறவு சாமான்களை அவுத்து வைக்கலாம்'.

"ஆமாங்குறேன் ஒரே சுண்ணாம்பு நாத்தம். படுத்தா குடு கண்டுடும்" என்றவாறு கட்டிடத்துக்கு இப்பக்கமாய் தெரிந்த அடி பம்புக்கு நடந்தாள். "ம்மா நானும்" என்று செந்தில் துள்ளிக் கொண்டு ஓடினான்.

இரத்தினத்துக்கு ஏறுவெயிலுக்கு தலைமறைவாய்சற்று குந்தலாம் போலிருந்தது. பக்கத்தில் சரளைக் கற்கள் மீது ஒற்றை மரமொன்று திட்டுதிட்டாய் நிழலை துப்பியிருந்தது. கற்களின் மீது பக்குவமாய் குந்தி, வெளிச்சோடிய வாசல் பக்கம் ஏக்கமாய் பார்த்தான்.

இன்னேரம் தெருவா, நம்மூரா இருந்தா, காளி வந்து ரெண்டு தடவ வெத்தல, சீவல் கேட்டிருப்பான். கொஞ்சம் இளைப்பா ஒக்காந்தாலே, "என்ன மாப்ளே, சொணங்குனாப்புல இருக்க, வேல் இல்லேன்னா கல்லறுக்க வாயேன்" என்று சுண்ணாம்பு காளவாய்க்குப் போற மணி வலிந்து வலிந்து கேட்பார்.

முன்னெல்லாம் பொழப்பு இப்புடியா இருக்கும். வைகாசி பொறந்தாக்கா, வாழ கட்டு ஏத்தி வண்டி மாளாது, கொல்லைக் காயப் பறிக்க கூடப் போறாது? இப்ப, செங்கல்லு அறுக்கப் போவலாமா? சேறு கொழப்ப போவலாமான்னு அதுக்கும் திண்டாட்டம்ல ஆயிடுச்சி! ஆத்துலேயும் தண்ணி இல்ல, அவுச்சி திங்கவும் ஜோலி இல்லேன்னு பொழப்பு ஏந்தான் இப்புடி ஆச்சோ! காரணங்கள் தெரியாமல் காலத்தை நொந்து கொண்டான்.

"தே! என்ன கனவுல இருக்கியா, கார் சத்தம் கேட்டுது பாரு" என்று முத்தம்மா குரல் கொடுக்க, திடுக்கிட்டவாறு அவசரமாய் எழுந்து வாசல் பக்கம் ஓடினான்.

கேட்டுக்கு வெளியே கார் ஹாரன் தொடர்ந்தது. மொதலாளியா இருக்கும் என்ற யூகத்துடன் கேட்டை திறந்துவிட்டான். காரை உள்ளே ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கியவரையே முதலில் கண் இமைக்காமல் பார்த்தான் இரத்தினம். டி சர்ட்டும், சார்ட்சும் போட்டிருந்த அவரது தோற்றம் அவனுக்கு வேடிக்கையாயிருந்தது.

"வணக்கமய்யா! இரண்டு கைகளையும் சேர்ந்து கும்பிட்ட மாதிரி மெலிதாய் சிரித்தான். மூக்கு கண்ணாடியை வலக்கையால் கழட்டி விட, அது மினுமினுக்கும் செயினில் கழுத்தில் தொங்கியது. பரபரப்பின்றி மெதுவாக ஒரு சிகரெட்டை பற்ற வைத்தவாறு "ஓ! நீங்கதான் செல்வத்துக்கு உறவுக்காரங்களா" என்ற விசாரித்ததை "ஐயா உட்கார்றீங்களா" என்றான் இரத்தினம் பணிவாக. "நோ... நோ..." என்று கையை அசைத்தவாறு, 'நானும் சுவாமிமலகாரன்தான் நம்பூரு ஆளா இருக்கட்டும்னுதான் உங்கள வரச் சொன்னே, எடத்துக்கு காவலா இருக்கணும், கட்டுமான சாமான்களை கவனமா பாத்துக்கணும் புரியுதா" என்றார் புகை மூட்டத்துடன், "சரிங்கய்யா" என்றான் இரத்தினம் பணிவாக.

• • •

புது வீட்டுக்கு முதலாளி குடிவந்து ஒருவாரம் ஓடிவிட்டது. தோட்டத்தில் சுள்ளி பொறுக்கிய நேரம் போக, பக்கத்திலுள்ள கடைகளுக்குப் போவது, அக்கம் பக்கம் வேலைக்காரர்களிடம் பேசுவது என முத்தம்மா பழக்கத்தை விரிவு படுத்திக் கொண்டாள்.

இரத்தினமும் கட்டிடம் கட்டுபவர்களோடு சேர்ந்து கம்பி கட்ட, முள்வேலி வளைக்க என்று புதிய வேலைகளை ஓரளவு பழகியிருந்தான். ஊரிலிருந்து பொழப்பற்று வந்தோம் என்ற ஏக்க உணர்வை போக்கும் வண்ணம் புதிய நிலைமைகள் தெம்பூட்டியிருந்தன.

நாட்கள் பொழுதுகளாய் கரைய முத்தம்மா இரத்தினத்திடம் ஊருக்குப் போவது பற்றி அச்சாரம் போட்டாள், "ஏங்க பொங்கலுக்கு ஊருக்கு போவலாமா, அத்த கூட கடுதாசி போட்டிருந்தாங்க" என்றாள்.

"ஆமாம், அங்க ஆத்துல தண்ணிவந்து, ஊட்ல வெள்ளாம தள்ளுது, அள்ளி வைக்க அவசரமா போவணுமாக்கும், இப்பதான் வந்து கைல நாலு காசு பாத்துருக்கோம், அதயும் கொண்டு போய் ரயலுகாரன்கிட்ட, காருகாரன்கிட்ட கொடுக்கலாம்கிறியா, தோ பாரு ரண்டாயிரமாவது சேர்த்தாதான் ஊருக்கு போயி வரலாம், எதாவது பயிர் பண்ணவும் கொஞ்சம் உதவும்" என்றான் கண்டிப்புடன்.

"நீங்க என்னா நெனக்கிறீங்கன்னு கேட்டேன்" என்றாள் மெதுவாக, பதில் சொல்லாமல் "உக்கூம்" என்றான் சலிப்போடு "எங்க செந்திலு?" வந்த நாலு நாளைக்குதான் ஊரு ஊருன்னான், இப்ப அன்னம் திங்க கூட வராம ஒரே வெளையாட்டுதான், தோ அங்க பெயிண்டு அடிக்குற எடத்துல, வெளையாடிகிட்டு இருக்கான், கூப்பிடட்டுமா" என்றாள்.

"கூப்பிடு, வெளிய போயிட்டு வர்ற நேரத்துக்கு புள்ளைய பாக்கவே முடியமாட்டேங்குது"

முதலாளி விட்டு பையனின் சாவி கொடுத்தால் டமாரம் அடிக்கும் குரங்கு பொம்மையை வேடிக்கைப் பார்த்தவாறு கை தட்டிக் கொண்டிருந்த செந்திலை "வாடா அப்பா வந்திருக்கு" என்று ஆசையாய் கூப்பிட்டாள் முத்தம்மா.

"போ... நான் அப்பொறம் வாரேன்" கையை அசைத்து வர மறுத்தவனை "வெள்ளாட்டு, வெள்ளாட்டுன்னு வீட்டு நெனப்பே அத்து போச்சா வாடா," என்று தரதரவென்று கையைப் பிடித்து இழுத்து வந்தாள்.

"போ, போ" என்று அவளை கையால் அடித்த வண்ணம் சிணுங்கிக் கொண்டே திரும்பி ஓட முயற்சித்தவனை வலுவாக இழுத்து வந்தாள்.

"டேய், டேய் செந்திலு இந்தாடா போண்டா நல்லா இருக்குடா" இரத்தினம் கண்களில் பாசம் மிகுந்த பார்வையுடன் அவன் கையில் பொட்டலத்தை திணித்தான்.

"போ, எனக்கொன்னும் வேணாம், அந்த சுரேசு திங்குற மாதிரி பிசுகெட்டு

படிப்பகம்

www.padippakam.com

தான் வேணும்'' என்று முதலாளி வீட்டை கைகாட்டியவாறு பொட்டலத்தை மண்ணில் எறிந்தான் கோபமாக.

''படுவா ராஸ்கல், திங்குறதயா மண்ல எறியுற அவ்வளவு திமிரா வச்சிருச்சி'' என்று ஆத்திரத்தை செந்தில் வாயிலும், கையிலுமாய் அறைந்தான் இரத்தினம்.

''தே புள்ளைய போட்டு ஏன் இப்படி காச்சி போற மாதிரி அறையற. அவன் சின்னபுள்ள தெரியாம பண்றான்னா. நீ எதிரியாட்டம் அடிக்கிறியே. அழாதடா, போண்டாவ மண்ல எறியலாமா தப்புதானே'' என்று மகனை கண் துடைத்த வண்ணம், கீழே கிடந்த போண்டாவை எடுத்து முந்தானையில் துடைக்க ஆரம்பித்தாள்.

''எல்லாம் நீ குடுக்கற செல்லம் தான், எப்ப பாத்தாலும் அவுங்க வீட்டுக்கு வெளையாட வுட்டுர்ற, இப்ப ஆயி அப்பன் நெனப்புதான் இல்லேன்னா, திங்குற சாமானயும் ஒசத்தியா கேட்குது. வூட்டு பெரியுது நல்லா வளர்க்குற புள்ளைய''.

''ஆ, ஊன்னா நீ எம்மேல பாயி, சின்ன புள்ள எங்க போயி வெளையாடும், வூட்லயா அடைஞ்சி கெடக்கும், சின்ன விசயத்த பெரிசாக்காத'' என்று பதிலுக்கு கூறிவிட்டு, சரி வா சாப்பிட என்று மகனோடு தட்டெடுக்கப் போனாள்.

தேம்பிக் கொண்டிருந்த செந்திலை அழைத்து மடியில் உட்கார வைத்துக் கொண்டு சகஜ நிலைக்கு வந்தவனாய் பேச ஆரம்பித்தான் இரத்தினம்.

''ஒரு மாசம் இருந்து பின்னால கொஞ்சம் கம்பி வேலையெல்லாம் முடிஞ்சப்புறம் ஐயா நம்பளப் போகச் சொல்லிருக்காங்கன்னு உன் தம்பி சொன்னான். ''இதே மாதிரி வேற இடம் கிடைக்கும் அங்க தங்கலாம்னான்''

எதிர் பார்த்ததுதான் என்றாலும் முத்தம்மாவுக்கு திக்கென்றது. ''அப்ப நம்ம காலி பண்ண வேண்டியதுதானா?'' என்றாள் சோகமாக.

''இத மாதிரி மொதலாளியா, காசப் புடிக்காம, கரிச்சிக் கொட்டாத எடமா அமையணும், முணுமுணுத்தவாறு இஷ்ட தெய்வத்திடம் முறையிட்டாள்.

• • •

''முத்தம்மா! முத்தம்மா!'' அடுப்போடு போராடிக் கொண்டிருந்தவள் குரல் கேட்டு வாசல் பக்கம் உற்றுப் பார்த்தாள். பரபரக்க எழுந்தவளாய், ''மொதலாளி அம்மா நீங்களா, சொல்லி அனுப்பக் கூடாது, அடுப்புப் புகைச்சல்ல ஒண்ணுமே புரியல'' என்றாள் குற்ற உணர்வோடு.

''காலைல காய்கறிகாரன்கிட்ட பச்ச மிளகாய் வாங்க மறந்துட்டேன். ஒரு கால் கிலோ தெருக்கடைல வாங்கியாறியா!'' குழைவாகப் பேசினாள் முதலாளி அம்மா.

''நீங்க போங்கம்மா! தோ, நான் வாங்கியாறேன், என்று அடுப்படி வேலையை அப்படியே போட்டுவிட்டு வேகமாய் புறப்பட்டாள் முத்தம்மா.

புதுக்கட்டிடம் பூரணமாய் எல்லா வேலைகளும் முடிந்து முதலாளி வீட்டில் குடி வந்து விட்டார்கள். ஒரு வாரமாய் இரவில் முத்தம்மா உலை வைப்பதையே நிறுத்திவிட்டாள். ராவில் முதலாளி அம்மா தருகிற மிஞ்சிய சோறும், குழம்பும் மறுநாள் காலை வரை ஈடு கொடுத்தது. இரத்தினம் எப்போதாவது வாங்கி வரும் போண்டாவை விட, அடிக்கடி முதலாளி வீட்டில் குழந்தைகளுக்கு வாங்கி வரும் பிஸ்கெட்டுகள், செந்திலுக்கும் நிரந்தரமானது.

''ந்தாங்கம்மா! பச்சை மிளகாயுடன் மீதம் காசையும் கொடுக்க வந்த முத்தம்மாவிடம், ''காச வச்சிக்க'' என்றாள் முதலாளி அம்மா. மீதம் இரண்டு ரூபாய் இருந்தது.

''எதுக்குங்கம்மா?'' பயம் கலந்த மரியாதையுடன் காசை நீட்டி பணிவாய் நெளிந்தாள் முத்தம்மா.

''தோபாரு முத்தம்மா, நான் மத்தவங்க மாதிரி இல்ல; நீயும் நல்லா இருக்கணும், நானும் நல்லா இருக்கணும், கொணந்தான் முக்கியம், உண்மையா, நேர்மையா இருந்தா போதும், யார் கிட்டேயும் நல்ல பேரு எடுக்கலாம். காச நீயே வச்சுக்க''

முதலாளி அம்மாவின் பதப்படுத்தப்பட்ட வார்த்தைகள் முத்தம்மாவுக்கு அவள் மேல் இன்னும் மதிப்பைக் கூட்டியது. ''காசு பணம் இருந்தாலும், இந்த மாதிரி நல்ல மனசு யாருக்கு வரும்'' சிறுவாட்டுக் காசுகளை அடிக்கடி டப்பாவைக் கவிழ்த்து எண்ணிப் பார்த்து பூரிப்படைந்தாள் முத்தம்மா.

''செந்திலு, ஏய் செந்திலு'' அவளது குரலுக்கு பதில் குரல் வரவில்லை. முதலாளிவீட்டு புள்ளையை மூணு சக்கர சைக்கிளில் வைத்து தள்ளியபடி ''புர் புர்'' ரென்று சத்தமிட்டவாறு விளையாடிக் கொண்டிருந்தான்.

''சாப்பிட வாடா!'' அதட்டிக் கூப்பிட்டாள் முத்தம்மா.

''வேணாம் போ நான் வெளையாண்டுட்டு வாரேன்''

''வவுறு காஞ்சா தானா வருவ'' எரிச்சலோடு அடுப்படிக்கு விரைந்தாள்.

''டேய் சுரேசு கொஞ்சம் எழுந்திரிடா, நான் உட்கார்ந்து ஓட்டிப் பாக்குறேன்'' செந்தில் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

''போ... உனக்கு ஓட்டத் தெரியாது, தள்ளுடா'' என்றான் அதட்டலாக.

''சரி, கடசிலே ஒரு ரவுண்டு எனக்கு தரணும் என்ன!'' நம்பிக்கையோடு அவனை குந்த வைத்து தள்ளிக் கொண்டிருந்தான்.

''இவன கூப்பிட்டு கூப்பிட்டுல்ல சோறு போட வேண்டிருக்கு என்று அலுப்புடன் வெளியே வந்து முத்தம்மாவுக்கு, செந்தில் காலில் போட்டிருந்த செருப்புதான் முதலில் கண்ணில் பட்டது.

''ஏய், ஏதுடா இது மொதலாளியம்மா பையன் செருப்ப நீ மாட்டிகிட்டு வர்றியே என்ன திமிரு உனக்கு? கோபத்தோடு அவள் கையை ஓங்க, ஏதோ சொல்ல வந்தவன் பயத்தில் அழ ஆரம்பித்தான். அவனை அப்படியே பிடித்து இழுத்தபடி, ''இந்தாங்கம்மா சுரேசு செருப்பு, இந்த முண்டம் மாட்டிகிட்டு வந்திடுச்சி'' என்றாள் பதட்டத்துடன்.

''தோ, பாரு முத்தம்மா, நானாத் தான் கொடுத்தேன். சுரேசுக்கு புது செருப்பு வாங்கிருக்கு வேஸ்ட்டாதானே போவும்னு கால்ல போடுறான்னேன். சரியா இருந்திச்சா மாட்டிகிட்டு வந்துட்டான்'' என்றாள் முதலாளி அம்மா.

''சரிங்கம்மா! நான் இவனாதான் எடுத்துட்டு வந்துட்டானோன்னு நெனச்சேன்'' என்றாள் பணிவுடன்'' சரிடா ராசா அம்மா தெரியாம அடிச்சிட்டேன்'' என்று செந்திலை கன்னத்தை துடைத்து விட்டாள். அது பழைய செருப்பு என்பது அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. மெருகு குலையாமல் புதுசு மாதிரி இருந்தது. ''இத எங்காவது வெளியப் போனா போட்டுக்கலாம்'' என்று காகிதத்தில் சுருட்டி வைத்தாள் முத்தம்மா.

• • •

''இரத்தினம் குளிர் ஜுரத்தில் படுத்து எழுந்து பதினைந்து நாள் ஆகியிருந்தது. காய்ச்சலில் படுத்ததைவிட, கையிலிருந்த காசில் ஒரு முன்னூறு வரை செலவாகிப் போனது அவனுக்கு பெரிய மனத்துயரானது.

''தே! பாரு, காசு, காசுங்காத மொதல்ல உடம்பப் பாரு'' என்றாள் முத்தம்மா கண்டிப்பான அன்புடன்.

மீதமிருந்த கட்டிட வேலையெல்லாம் முடிந்து, நாட்கள் போய் கொண்டிருந்தன. அன்று செல்வம் வந்திருந்தான், ''அத்தான் நாளைக்கு சாங்காலமே, நான் வேற எடம் காட்டுனேன்ல அங்க போயிடுங்க, மொதலாளி காலைலேயே வெளியே போயிவாரு, அதனால விடிஞ் சொன்னயே சொல்லிட்டு வர்றப்ப பூட்டு சாவிய, குடுத்திடுங்க, நான் சாங்கலமா புது எடத்துக்கு வாரேன்'' என்றவாறு சைக்கிளை வேகமாய்த் தள்ளி, ஏறினான்.


படிப்பகம்

www.padippakam.com



மறுநாள் காலை புறப்படுகிற வேகத்தில் வேலை நடந்தது.

ஊரிலிருந்து கொண்டு வந்த இரண்டு சாக்குடன், ஒரு சாக்குப்பை கூடியிருந்தது. ''கெளம்புற நேரத்துல இந்தப் பையனை வேறக் காணோம். சதா மொதலாளியம்மா ஊட்ல வெளையாட்டுதான் இன்னம எங்க போய் ஆடப் போவுது, ஏய்! செந்திலு, ஏய் செந்திலு! வேகமாய் குரலெடுத்த முத்தம்மாவை அதட்டினான் இரத்தினம்.

''ஏன் காட்டுக் கூச்சல் போடற போய் முதலாளி அம்மா ஊட்ல பாரு இருப்பான்''

முதலாளி வீட்டிற்குள் சாவி கொடுத்தால் டாமரம் அடிக்கும் குரங்கு பொம்மையின் சேட்டையைப் பார்த்து கை தட்டியவாறு சிரித்துக் கொண்டிருந்தான் செந்தில். ''செந்தில் வா சட்டப் போட்டுகிட்டு கெளம்பணும் என்றாள். முத்தம்மா அவசரமாக, ''நான் வல்ல போ!'' என்றான் விளையாட்டுக் களிப்பில்.

''வாடாண்ணா! என்று அதட்டியவாறு முத்தம்மா கையை ஓங்கிக் காட்ட, காலை தரையில் உதைத்துக் கொண்டு எரிச்சலோடு எழுந்து வந்தான் அவன்.

''அம்மா, ஐய்யா அப்போ! வர்றேங்க நல்லா உதவுனீங்க மறக்க மாட்டோம்'' இரத்தினமும் முத்தம்மாவும் கையெடுத்துக் கும்பிட்டனர். பிரம்பு நாற்காலிக்குள் உடலை புதைந்திருந்த முதலாளி அட்டணக்காலை எடுத்தபடி ''ஊம் அப்புறம் வேல ஏதாவது இருந்தா செல்வத்துகிட்ட சொல்லி அனுப்புறேன் வாங்க! மூணாவது தெருவுல உள்ள கட்டடத்துக்குதான போறீங்க. அதுவும் நல்ல இடந்தான்'' என்றவர் மனைவியிடம், மங்களம் 'ஏதாவது குடுத்து அனுப்பு '' என்றார்.

அவள் குழந்தையின் பழைய சட்டை, கால் சட்டை, சில ஊனமுற்ற பொம்மைகள் என பொறுக்கியெடுத்து முத்தம்மாவிடம் தந்தாள். ''எதுக்கும்மா '' என்று தயக்கத்துடன் வாங்கிக் கொண்டு, இரத்தினமும் அவளும் விடை பெற்றனர்.

''எங்கம்மா? எங்கம்மா?'' என்று நச்சரிதத செந்திலிடம் 'ஐயாகிட்டேயும், அம்மாகிட்டேயும் போயிட்டு வாரேன்னு சொல்லுடா'' என்றான் இரத்தினம். அவன் ஒன்றும் புரியாமல் ''நான் வல்ல போ!'' என்பதையே திரும்பத் திரும்ப சொல்லியபடி அடம்பிடித்தான்.

தெருவைக் கடந்து புதிய கட்டிடத்தை நெருங்க, நெருங்க அழுகையை அதிகரித்தான் செந்தில். ''இங்க வேணாம் நம்ப ஊட்டுக்கு போவலாம் வா, சுரேசு, கோபியோட வெளையாடுவோம்ல அந்த... நம்ப ஊட்டுக்கு போவலாம் வா'' தலையைக் கலைத்துக் கொண்டு அடம்பிடித்தான்.

''வாய மூடுறா நாயே நான் அப்பேத்து கலந்து பாக்குறேன் ஓய்வனாங்குறான், உங்க அப்பனோட பங்களாவா அது, அங்க போக? மூடுறா வாய'' கடுப்போடு அதட்டினான் இரத்தினம்.

''தே! சின்ன புள்ளகிட்ட நீ வேற வியாக்யானம் பேசறியே ஏன் எரிச்சல அவன் மேல காட்டுற, நீ அழாதடா ராசா, நாம சுரேசு, கோபியப் பாக்க அப்புறம் போவலாம்'' என்று சமாதானம் சொல்லி மூட்டையை இறக்கி வைத்தாள். அவன் அழுகை ஓயாதது கண்டு ''தோ பாரு வெளயாடலாமா! என்று மணல் கொட்டிக் கிடந்த இடத்தில் உட்கார்ந்து மணலை குவித்து ஈறு குச்சியை மறைத்து வைத்து கண்டுபிடி, கண்டுபிடி என்று விளையாட்டுக் காட்டினாள்.

இன்னோன்னு விளையாடலாமா? என்றவளை கண்ணைக் கசக்கியவன் கொஞ்சம் கவனிக்க ஆரம்பித்தான். ''இந்தா! மணலை எடுத்து செந்திலின் கையில் வைத்து அதில் ஒரு ஈறு குச்சியை குத்தி வைத்தவாறு, அவனது கண்களை கைகளால் பொத்தி ''அம்மாவூடு எங்க இருக்கு? அம்மா ஊடு எங்க இருக்கு?'' என்று அவள் வீட்டுப் பக்கமாய் நடக்க, மெல்லிய குரலில் ''ஆத்துக்கு அந்தாண்டல ஆத்துக்கு அந்தாண்ட'' என்றவாறு செதும்பிக் கொண்டே நடக்க ஆரம்பித்தான்.

படிப்பகம்

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ். நாயகர்களின்

# அடிமை விநாயகர்

ஒவ்வொரு தீபாவளிக்கும் புதிது புதிதா கள் அறிமுகமாவதைப் போல, ஒவ்வொரு சதுர்த்திக்கும் புதுப்புது விநாயகர்களை அறிமு றது இந்து முன்னணி. ''விநாயகருக்கு இல்லாத ஆயுதங்களையும் குணங்களையும் அவர் மீது தி அருவருக்கத் தக்க நடவடிக்கை.. விபரீத விநாய உருவாக்கி வழிபடச் செய்ய முயலும் செயல்கள் அ தும் விபரீத விளைவுகளைத்தான் ஏற்படுத்தும்'' சுவாமி சுந்தரானந்தா என்பவர் தினமணிக்கு வாசகர் தம் எழுதியுள்ளார்.

மடியில் அரக்கனை வைத்துக் குடலைக் கிழிக்கு நரசிம்ம விநாயகர், அரங்கநாதனைப் போல பாம்பின் மீ பள்ளி கொண்ட விநாயகர் என்று ரகம் ரகமான விநாயகர் களை இந்த ஆண்டு களத்தில் இறக்கியது இந்து முன்னணி. இந்த ஆண்டு விநாயகர் ஊர்வலத்தில் தடியடி நடந்துள்ள தால் அடுத்த ஆண்டு 'தடியடி விநாயகர்' அறிமுகமாக லாம்.

பாரதிய ஜனதாவின் அரசியல் நோக்கத்தை நிறை வேற்றத்தான் இந்த விநாயகர்கள் அவதரிக்கின்றனர் என்ப தால், அதன் அரசியல் நடைமுறைக்கேற்ற சில விநாயகர் களை நாமும் அறிமுகம் செய்கிறோம்.



## கோக் விநாயகர்

டெல்லி பாராளுமன்றக் கட்டிடம் மற்றும் செங்கோட்டை யைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் திரும்பிய பக்க மெல்லாம் கோகோ-கோலா விளம்பரங்கள். டெல்லி நகர மக்களின் நெற்றியைத் தவிர நகரின் மற்றெல்லா இடங்களும் கோகோ-கோலா கம்பெனிக்கு வாடகைக்கு விடப்பட்டு விட்டதால் இந்தியாவின் தலைநகரத்தையே கோக் கம்பெனி விலைக்கு வாங்கிவிட்டது போலத் தோன்றுகிறது. டில்லி மாநகர நிர்வாகம் யார் கையில் தெரியுமா? சுதேசி சிப்பாய்களான பாரதிய ஜனதா கையில்தான்!

## பாக் விநாயகர்



தமிழ்நாட்டில் எங்கேயாவது பட்டாசு வெடித்தா லும் உடனே பாக். சதி என்று பரபரப்பூட்டுகிறது பாரதீய ஜனதா. ஆனால் சென்னை இந்து முன்னணி குண்டு வெடிப்பு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட வெடி மருந்து ஆர்.டி.எக்ஸ் இல்லை என்பதுடன் வெளிநாடு எதுவும் இந்தக் குண்டுவெடிப்பில் சம்பந்தப்படவில்லை என்றும் சி.பி.ஐ. அறிவித்துவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

''முதன் முதலில் தலித் பெண்ணை முதல்வ ராக ஆட்சியில் அமர்த்தியது நாங்கள்தான்'' பாரதீய ஜனதா.

## மாய விநாயகர்




## என்ரான் விநாயகர்



மகாராட்டிரத்தில் என்ரான் மின் திட்டத்தை ரத்து செய்து விட்டதாக ஜம்ப மடிக்கிறது பாரதீய ஜனதா. ஆனால் ராஜஸ்தான் பா.ஜ. அரசாங்கமோ அங்கே ஒரு மின் நிலையம் அமைக்க என்ரானுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறது. இதில் ஒன்றும் தவறில்லையென நியாயப்படுத்துகிறது.

அந்நியத் தொலைக்காட்சிகளின் ஆக்கிரமிப்பால் பாரதப் பண்பாடு சீரழிவதாகக் கூப்பாடு போடுகிறது பாரதீய ஜனதா. ஆனால், பாரதீய ஜனதா பிரமுகர் ஜெயின் நடத்தும் ஜெயின் டிவி தினமும் இரவு 11 மணிக்கு மேல் ஆபாசப் படங்களை ஒளிபரப்புகிறது. இதுவும் பெருமை மிக்க பாரதப் பண்பாட்டின் அங்கம் தான் என்கிறார் ஜெயின்.

## ஜெயின் விநாயகர்



## பாட்ஷா விநாயகர்



ரஜனி கட்சி எதுவும் தொடங்கினால் பி.ஜே.பி. அவருடன் கூட்டணி வைத்துக் கொள்ளலாம் - மதுரையில் அத்வானி பேட்டி.

படிப்பகம்

www.padippakam.com

# பொது சிவில் சட்டம் மாயையும் உண்மையும்

## 2

• சூரியன்

பொது சிவில் சட்டத்திற்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வியுடன் சென்ற இதழில் இக்கட்டுரை முடிந்திருந்தது. இதற்கிடையில் இக்கேள்விக்கு மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் பதில் சொல்லியிருக்கிறார்: ''நீதி மன்றம் யார் மீதும் தேசபக்தியைத் திணிக்க முடியாது.'' நீதிபதி குல்தீப்சிங்கிற்கு அமைச்சர் வழங்கிய பதிலடி இது. ஆனால் ஒரு காங்கிரசு அமைச்சர் என்ற முறையில் காஷ்மீர் மக்கள் மீது தேசபக்தியைத் திணிப்பது குறித்து அவர் வெட்கப்படவில்லை.

இரட்டை நாக்கு என்பது காங்கிரசுக்கு மட்டும் உரியதல்ல; பாரதீய ஜனதாவும் காங்கிரசின் உடன்பிறப்புதான். பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து மதவாத அரசியல் கட்சிகளைத் தடை செய்வதாகக் கூறிக் கொண்டு அரசியல் சட்டத்தின் 35-A பிரிவிற்கு திருத்தம் ஒன்றை — 80-வது அரசியல் சட்டத் திருத்தம் — நரசிம்மராவ் அரசு கொண்டு வந்தது. அதனைப் பரிசீலிக்க அமைக்கப்பட்ட பாராளுமன்றக் கூட்டுக் கமிட்டியில் அங்கம் வகித்த பாரதீய ஜனதா தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டது. ''வெறும் சட்டத்தினால் ஒரு துடிப்பான தேசத்தை உருவாக்கிவிட முடியாது.''

### சிவில் ஒருமைப்பாடும் கிரிமினல் ஒருமைப்பாடும்

''உண்மைதான். பொது கிரிமினல் சட்டங்களாலும், 'தடா' போன்ற 'உயிர்த்துடிப்புள்ள' கிரிமினல் சட்டங்களாலும் கூட உருவாக்க முடியாத ஒருமைப்பாட்டையா 'பொது சிவில் சட்டம்' உருவாக்கிவிடும்?'' என்று நாம் திருப்பிக் கேட்டால் அந்தக் கணமே அத்வானி தனது இரண்டாவது நாக்கினால் பேசத் தொடங்குவார்.

''அரசியலிலிருந்து மதத்தைப் பிரிக்கின்ற சட்டம் இருக்கிறதே, அந்த சட்டம் மட்டும்தான் துடிப்பான தேசத்தை உருவாக்காது என்று நாங்கள் கூறினோம்'' என்பார் அத்வானி. அரசியலிலிருந்து மதத்தைப் பிரிப்பதென்பது ''வேரற்ற, ஒழுக்கமற்ற, ஒழுக்கக்கேடான இந்தியாவைத்தான் உருவாக்கும்'' என்று தனது அறிக்கையில் குறிப்பிட்ட பா.ஜனதா, ''அரசியலிலிருந்து மதத்தைப் பிரிக்கும் முயற்சிகளை சட்டரீதியாக எதிர்த்துப் போராடுவோம்'' என்றும் தனது அறிக்கையில் எச்சரித்தது.

அரசியலிலிருந்து மதத்தைப் பிரித்தால் தேசமே ஒழுக்கம் கெட்டுச் சீரழிந்துவிடும் என்று கவலைப்படும் ஒரு கட்சி, குடும்பத்திலிருந்து மதத்தைப் பிரிக்கும் பொது சிவில் சட்டத்தைத் தீவிரமாகக் கோருவது ஏன்? குடும்பத்தின் ஒழுக்கம் என்ன ஆவது?

இந்தக் கேள்விக்கு பா.ஜனதா ஒருக்காலும் பதில் சொல்ல முடியாது. ஆனால் ஒரே சிவில் சட்டத்திற்கான பா.ஜனதாவின் கோரிக்கை 'பிற மதத்தினர்மீது இந்து சட்டத்தைத் திணிப்பதற்கான சதியே'' என்று குற்றம் சாட்டும்போது மட்டும், அதை மறுத்து தாங்கள் ஒருசீரான சிவில் சட்டத்தை மட்டுமே கோருவதாக மழுப்புகிறது.

> ''பொது கிரிமினல் சட்டங்களாலும், 'தடா' போன்ற 'உயிர்த்துடிப்புள்ள' கிரிமினல் சட்டங்களாலும் கூட உருவாக்க முடியாத ஒருமைப்பாட்டையா 'பொது சிவில் சட்டம்' உருவாக்கிவிடும்?''

### சரியான கேள்வி!

''மேலை நாடுகளில் பொது சிவில் சட்டத்தின் கீழ்தான் முஸ்லீம்களும் வாழ்கிறார்கள். அங்கே இல்லாத மத அடையாளம் குறித்த பிரச்சினை இந்தியாவில் மட்டும் எப்படி வந்தது?'' என்று எதிர்க்கேள்வி எழுப்புகிறது.

காங்கிரசு முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரையிலான யாரும் பா.ஜனதாவின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. ஆனால், இந்தக் கேள்வியை எழுப்பியதன் மூலம் அடிப்படையான பிரச்சினை என்ன என்பதைப் புரிந்து கொள்ள பா.ஜனதா நமக்கு பெரிதும் உதவியுள்ளது.

• • •

பொது சிவில் சட்டத்தை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் ஆகிய அனைவருமே அது 'மதசார்பற்றது' என்ற பொருளில்தான் பெரும்பாலும் புரிந்து கொள்கின்றனர். ஆனால் இச்சட்டம் மதசார்பற்றதாக இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் 44-வது பிரிவு கூறவில்லை. ஒரு சீரான உரிமையியல் சட்டத்தை (Uniform Civil Code) நாடு முழுவதற்கும் கொண்டு வருவதை மட்டுமே அது சிபாரிசு செய்கிறது.

பொது சிவில் சட்டம் (Common Civil Code) என்பது மதசார்பற்ற சிவில் சட்டம் (Secular Civil Code) என்ற பொருளில்தான் மேலை நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் நமது அ.நி.சட்டம் 'பொது' என்ற சொல்லையோ, 'மதசார்பற்ற' என்ற சொல்லையோ பயன்படுத்தாமல், 'ஒரு சீரான' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. மத அடிப்படையிலான தனிநபர் சட்டங்களை தற்போதுள்ளதுபோலவே வைத்துக் கொண்டு அவற்றின் உள்ளடக்கத்தை மட்டும் 'ஒரு சீராக' இருக்கும்படி மாற்றியமைப்பது என்றும் இதற்குப் பொருள் கூற முடியும். அவ்வாறு கூறியும் வருகின்றனர்.

### அரசியல் சட்டமோசடி

அ.நி.சட்டத்தின் நோக்கம் இதுவல்ல என்றால் 'மதசார்பற்ற' என்ற சொல்லை தெளிவாக அது குறிப்பிட்டிருக்கலாம். அவ்வாறு குறிப்பிடத் தவறியது கவனக்குறைவால் நடந்த பிழை அல்ல, கவனமாகச் செய்யப்பட்ட மோசடி.

1950-இல் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம் இந்தியாவை மதசார்பற்ற குடியரசு என்று கூறவில்லை. 1976-இல் கொண்டு வரப்பட்ட 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தையொட்டி இந்திய அரசியல் சட்டத்தின் முன்னுரையில் ''இந்தியாவை ஒரு மதசார்பற்ற, சோசலிச, ஜனநாயகக் குடியரசாக அமைப்பதற்கு உறுதி பூணுவதாக'' குறிப்பிடப்பட்டது.

### மதச்சார்பின்மை - லட்சியம் மதவெறி - நிச்சயம்!

இது வெறும் ''லட்சியம்''தானேயொழிய இதற்கு எந்தவித சட்ட உத்திரவாதமும் கிடையாது. சோசலிசம், மதசார்பின்மை ஆகிய சொற்களின் பொருளை வரையறுப்பதற்கான முயற்சி பின்னர் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதில் எந்த முடிவும் எடுக்கப்படாததால் இன்று வரை இச்சொற்களுக்கான பொருள் சட்டமொழியில் விளக்கப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

எனவே அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது போல நமது நாட்டில் மதசார்பின்மை நிலவுவது உண்மை என்று ஏற்றுக் கொள்பவர்கள், சோசலிசம் நிலவுவதும் உண்மை என்பதை ஏற்கவேண்டும்.

இருப்பினும் 'சர்வ தர்ம சம பாவ' (அனைத்து மதங்களையும் சமமாக நடத்துதல்) என்று காந்தி கூறிவந்த விளக்கத்தைத்தான் இந்திய மதசார்பின்மையின் விளக்கமாக அனைவரும் கூறி வருகின்றனர். இதன் அடிப்படையில்தான், அவ்வப்போது எழும் பிரச்சினைகளில் மத சார்பின்மைக்கான விளக்கத்தை உச்சநீதி மன்றம் கூறி வருகிறது. இதுதான் மதசார்பின்மைக்கான விளக்கம் என்றால், இதிலிருந்து மேலை நாடுகளில் உள்ளதைப் போன்ற மதசார்பற்ற சிவில் சட்டத்தை எங்ஙனம் உருவாக்க முடியும்?

**தாயில்லாமல்**
**பிள்ளையா?**

மதசார்பற்ற அரசு ஒன்று நிலவாமல் மதசார்பற்ற சிவில் சட்டம் மட்டும் எப்படிக் கொண்டு வர முடியும் என்பதுதான் உயிராதாரமான கேள்வி.

மனிதனின் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப்படுத்தவும், ஒழுக்கத்தை வரையறுக்கவும் மதம் பெற்றிருக்கின்ற அனைத்து சட்டபூர்வமான அதிகாரங்களையும் பறிப்பது, மதத்துடனான அனைத்து உறவுகளிலிருந்தும் அரசு தன்னைத் துண்டித்துக் கொள்வது, மதம் என்பது ஒரு தனிநபரின் நம்பிக்கை சார்ந்த சொந்த விவகாரம் என்று வரையறுப்பது ஆகியவை மதசார்பின்மைக் கோட்பாட்டின் அடிப்படைகள்.

இது மேற்கத்திய மதசார்பின்மை கோட்பாடு என்றும், நமது விசேடமான சூழ்நிலைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டதுதான் ''அனைத்து மதங்களையும் சமமாகப் பாவித்தல்'' என்ற இந்திய மதசார்பின்மைக் கோட்பாடு என்றும் பாரதீய ஜனதா முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரை அனைவரும் வாதிடுகின்றனர்.

அரசியலிலிருந்து மதத்தைப் பிரிக்கும் மேற்கத்திய மதச் சார்பின்மையைக் காலனிய சிந்தனை என்று சாடுகிறது பா. ஜனதா.

**'ஐவருக்கும் தேவி**
**அழியாத பத்தினி'**

இது குறித்து பெரியார் கூறிய கருத்து இங்கே நினைவு கூறத்தக்கது.

''இவர்கள் எந்த நாட்டைப் பார்த்து, எந்த எந்த மொழியில் 'Secular' 'State' என்று குறிப்பிட்டிருக்கிறார்களோ, அந்த நாட்டில் அந்த மொழியில் 'Secular' என்பதற்கு என்ன பொருள் இருக்கிறதோ, அவர்கள் எந்தப் பொருளில் அதைப் பயன்படுத்தி இருக்கிறார்களோ, அந்தப் பொருளில் தானே நாமும் பயன்படுத்த வேண்டும். அதை விட்டு விட்டு, அந்த சொல்லை மட்டும் வைத்துக் கொண்டு, 'Secular' என்றால் மதச்சார்பற்றது என்று பொருள் அல்ல — எல்லா மதங்களையும் ஒன்று போல் கருத வேண்டும் என்பதுதான் பொருள் என்று பார்ப்பனர்கள் கூறுகிறார்கள்.... பத்தினி என்றால் எல்லா ஆண்களையும் தங்கள் கணவன் போலக் கருதி நடந்து கொள்ள வேண்டும், அதுதான் பத்தினித்தன்மை என்று அர்த்தம் கொள்வது எவ்வளவு அயோக்கியத்தனமானதோ அதை விட அயோக்கியத்தனமானதாகும், மதச் சார்பற்றது என்பதற்கு எல்லா மதங்களையும் ஒன்று போல் கருதுவது என்பது''. என்று கூறுகிறார்.

**சிறுபான்மைத்தலைவர்கள்**
**ஆதரிப்பது ஏன்?**

அரசியல் சட்டத்தின் பிரிவு - 26 மதநிறுவனங்கள் கோடிக்கணக்கில் சொத்து வைத்துக் கொள்ளவும், புதிதாகச் சேர்க்கவும் உரிமை தருகிறது; எந்த ஒரு குறிப்பிட்ட மதத்திற்காகவும் அரசு தனது

> பொது சிவில் சட்டத்தை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் ஆகிய அனைவருமே அது 'மதசார்பற்றது' என்ற பொருளில்தான் பெரும்பாலும் புரிந்து கொள்கின்றனர். மதசார்பற்ற அரசு ஒன்று நிலவாமல் மதசார்பற்ற சிவில் சட்டம் மட்டும் எப்படிக் கொண்டு வரமுடியும் என்பதுதான் உயிராதாரமான கேள்வி. எனவே இந்திய மதசார்பின்மையை நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

பணத்தைச் செலவிடலாகாது என்று கூறுகிறது சட்டப்பிரிவு - 27; ஆனால் கேரளத்திலும் தமிழகத்திலும் உள்ள திருவிதாங்கூர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கோயில்களுக்கு கேரள, தமிழக அரசுகள் ஆண்டுதோறும் சில லட்சம் ரூபாய்களை அளிக்க வேண்டுமென சட்டப்பிரிவு 290-A கட்டளையிடுகிறது. சட்டப்பிரிவு - 28 (2) அரசு உதவியும், அங்கீகாரமும் பெறுகின்ற தனியார் கல்வி நிறுவனங்களில் மதபோதனை செய்வதை அனுமதிக்கிறது; சட்டப்பிரிவு - 48 (வழிகாட்டும் கோட்பாடு) பசுவதையைத் தடை செய்வதைத் தனது லட்சியமாகக் கூறுகிறது; சட்டப்பிரிவு - 30 சிறுபான்மை மதத்தினர் கல்வி நிறுவனம் நடத்திக் கொள்வதற்கான உரிமையை அளிக்கிறது. இதுதான் மதச் சார்பற்ற அரசியல் சட்டத்தின் அழகு.

ஆனால் சிறுபான்மை மதத்தினருக்கு அளிக்கப்படும் 'சலுகை'களை மட்டும் சுட்டிக் காட்டி அதன் காரணமாக இது போலி மதச்சார்பின்மை என்று பா. ஜனதா வாதிடுகிறது. அவற்றை மட்டும் நீக்கிவிட்டால் உண்மையான மதசார்பின்மை நிலை நாட்டப்பட்டுவிடும் என்று கூறுகிறது.

**பிறநாடுகளில்..**

பிற நாடுகள் சிலவற்றில் இக்கொள்கை எவ்வாறு அமல்படுத்தப்படுகிறது என்பதை இந்த இடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது.

சீனா, ரசியா மற்றும் பிற முன்னாள் சோசலிச நாடுகளில் சமூக வாழ்க்கையின் அங்கம் என்ற தகுதியிலிருந்து மதம் சட்ட பூர்வமாக நீக்கப்பட்டது. அமெரிக்காவிலும் பிரான்சிலும் அரசு விவகாரங்களிலிருந்து மதம் தெளிவாக விலக்கி வைக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் கிறித்துவ மதம் தலைகாட்டக் கூடாது என்ற கொள்கையை பிரான்சு கறாராகக் கடைப்பிடிக்கிறது.

மெக்சிகோ இன்னும் ஒருபடி மேலே சென்று மத குருமார்களுக்கு தேர்தலில் போட்டியிடும் உரிமை மற்றும் ஓட்டுரிமையைக் கூட ரத்து செய்திருக்கிறது.

துருக்கி, எகிப்து, துனிசியா, மொராக்கோ போன்ற முஸ்லீம்கள் அதிகம் வாழும் நாடுகள் இசுலாமை அரசு மதமாகக் கொள்ளவில்லை என்பதுடன், மொராக்கோ அரசியலில் மதம் கலப்பதைத் தடை செய்துள்ளது.

இங்கிலாந்து, நார்வே, சுவீடன், டென்மார்க் போன்ற 'ஜனநாயக' நாடுகள் குடிமக்களிடையே மதப்பாகுபாடு காட்டவில்லையென்றாலும் அரசு மதம் என கிறித்தவத்தை அறிவித்துள்ளன.

வங்காள தேசத்தில் அரச மதமாக இஸ்லாம் உள்ள போதும் பிறமதத்தினருக்கு மத உரிமை தரப்பட்டுள்ளது. சவுதி அரேபியாவில் இசுலாமியர் தவிர்த்த பிற மதத்தினர்க்கு மத உரிமை கிடையாது.

மலேசியா, இந்தோனேசியா, ஈராக், ஜோர்டான், குவைத், பக்ரீன் போன்ற நாடுகளில் இஸ்லாமே அரசு மதம்.

மேற்கூறிய விவரங்களைப் பரிசீலிக்கும் போது, கறாரான, இலக்கணப் பொருளிலான மதசார்பின்மைக் கோட்பாடு, முன்னாள் சோசலிச நாடுகளிலும், அமெரிக்கா, பிரான்சு போன்ற மேற்கத்திய நாடுகளிலும் கடைப்பிடிக்கப்படுவதைப் பார்க்க முடிகிறது.

மெக்சிகோ போன்ற பின் தங்கிய நாடுகளில் மதகுருமார்களின் வாக்குரிமையையே ரத்து செய்யுமளவுக்குத் தீவிரமாகவும், இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாடுகளில் கூட கிறித்துவம் அரசு மதமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதும் ஒவ்வொரு நாட்டின் வரலாற்றுச் சூழலுக்கேற்ப நடைபெற்றுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

பெரும்பான்மையான இசுலாமிய நாடுகளில் மதசார்பின்மைக் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இந்தியாவில் தற்போது கடைப்பிடிக்கப்படும் மதசார்பின்மையே முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்டுள்ள பெரும் சலுகை என்று அவர்களை மிரட்டுகிறது பா.ஜனதா. இந்தியர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் வைக்கும் கோரிக்கைகளை அந்நியர்கள் என்ற முறையில் பரிசீலித்துத் தீர்ப்பு கூறுகிறது.

அவ்வாறிருக்க, சிறுபான்மைத் தலைவர்கள் ஏன் இதை ஆதரிக்க வேண்டும்? கோடிக்கணக்கில் சொத்து வைத்துக் கொள்வதற்கும், கல்வி நிறுவனங்கள் நடத்திக் கொள்ளையடிப்பதற்கும் அரசியல் சட்டத்தின் பிரிவு 26 மற்றும் 30 ஆகியவை வகை செய்வதாலும், தத்தம் மதத்தைச் சேர்ந்த மக்களை அடிமைத்தனத்திலும் மடமையிலும் தொடர்ந்து இருத்தி வைத்துக் கொள்ள தனிநபர் சட்டங்கள் உதவுவதாலும் சிறுபான்மை மதத்தைச் சேர்ந்த ஆதிக்க சக்திகளும், பழமைவாதிகளும் இந்தப் போலி மதசார்பின்மையை முழுமனதாக ஆதரிக்கிறார்கள்.

மதசார்பின்மைக் கோட்பாடு அதன் சரியான பொருளில் அமல்படுத்தப்பட வேண்டும் என்று புரட்சியாளர்களும், பகுத்தறிவாளர்களும் கோரினால், இந்தியாவின் விசேடமான சூழ்நிலைகளைக் கணக்கில் கொள்ளாத 'வறட்டுத் தனம்' என்று கூறி சீர்திருத்தவாதிகளும் போலி கம்யூனிஸ்டுகளும் நம்மை நிராகரிக்கிறார்கள். நிலவுகின்ற மோசடி - மதசார்பின்மையை நியாயப்படுத்துவதில் இந்து மதவெறியர்களைக் காட்டிலும் இவர்களே முன் நிற்பதால் இப்போக்கினை அம்பலப்படுத்துவது அவசியமாகிறது.

> "அரசியலிலிருந்து மதத்தைப் பிரித்தால் தேசமே ஒழுக்கம் கெட்டுச் சீரழிந்து விடும் என்று கவலைப்படும் ஒரு கட்சி, குடும்பத்திலிருந்து மதத்தைப் பிரிக்கும் பொது சிவில் சட்டத்தைத் தீவிரமாகக் கோருவது ஏன்? குடும்பத்தின் ஒழுக்கம் என்ன ஆவது?"

**சிவில் சட்டத்தின் வரலாறு**

முதலாளித்துவத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து ஐரோப்பா முழுவதும் மன்னராட்சியை எதிர்த்து ஜனநாயகத்தை நிறுவுவதற்காக நடைபெற்ற புரட்சிகளில் தலையாயது பிரெஞ்சுப் புரட்சி. மன்னராட்சியை மட்டுமல்ல, மதகுருமார்களின் அதிகாரத்தையும், மதத்தையும் கேள்விக்குள்ளாக்கிய பிரான்சில் தான் உலகிலேயே முதன் முறையாக மதத்திற்கு அப்பாற்பட்ட சிவில் சட்டத்தை நெப்போலியன் அறிமுகப்படுத்தினான். அதுவரை எல்லா நாட்டு நீதிமன்றங்களிலும் கையில் பைபிளுடன் பாதிரியார்கள் அமர்ந்து ஆதிக்கம் செய்து கொண்டுதான் இருந்தனர்.

பிரெஞ்சுப் புரட்சியில் ஈடுபட்ட மக்களின் தீவிரத்தைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேய முதலாளிவர்க்கம், 'நாளை நமக்கும் இதே கதிதான்'' என்பதைப் புரிந்து கொண்டதால் பிரிட்டிஷ் அரியணையுடன் சமரசம் செய்து கொண்டது; மக்களை தார்மீகரீதியில் ஒடுக்கி வைக்கும் ஆற்றல் கொண்ட மதம், பிரான்சில் செயலிழந்து போனதைக் கண்டவுடன் ஆங்கிலேயத் திருச்சபையுடனும் சமரசம் செய்து கொண்டது. இங்கிலாந்தின் 'விசேடமான' இந்த சூழ்நிலையை ஏங்கெல்ஸ் விவரித்துள்ளார்.

இந்த விசேடமான சூழ்நிலையின் விளைவாகத்தான், உலகிற்கே 'நாகரிகத்தை' அறிமுகப்படுத்திய பிரிட்டிஷ் அரசாங்கம், இன்னமும் தங்களது நாட்டில் 'மன்னர் குடும்பம்' என்றொரு அநாகரிகக் கும்பலுக்கு மக்களின் வரிப்பணத்தில் சோறு போட்டு வருகிறது; கிறிஸ்துவை அவரது சிலுவையுடன் சேர்த்து தலையில் சுமந்து கொண்டிருக்கிறது.

## இந்து சட்டம் - இசுலாமியச் சட்டம் ஒரு ஒப்பீடு

பொது சிவில் சட்டம் குறித்துப் பேசுபவர்கள் இந்து சட்டம் முற்போக்கானதென்றும் இசுலாமியச் சட்டம்தான் பிற்போக்கு என்றும் கருதுகின்றனர். நீதிபதி குல்தீப்சிங் தெரிவித்துள்ள கருத்தும் அத்தகையதுதான். ஆனால் மையமான பிரச்சினைகளில் இவையிரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டுக்கும் பெரிய வேறுபாடில்லையென்பது புலனாகிறது.

இசுலாமியச் சட்டம் பெரும்பாலும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் உள்ளது. சீர்திருத்தப்பட்ட இந்து சட்டமோ மேற்பார்வைக்கு முற்போக்கு போலத் தோற்றமளித்து ஏமாற்றுகிறது.

பொது சிவில் சட்டம் தொடர்பான பிரச்சினைகளில் இசுலாமிய, இந்து சட்டங்களின் சாராம்சமான நிலை கீழே சுருக்கமாகத் தரப்படுகிறது.

### குழநதைத் திருமணம்

**இசுலாமியச் சட்டம்:** ஒரு சிறுவன் அல்லது சிறுமிக்கு அவர்களது காப்பாளர் திருமணம் செய்து வைக்கலாம். அச்சிறுமி பருவத்திற்கு வந்தபின் (15 முதல் 18 வயதிற்குள்) அவள் விரும்பாத பட்சத்தில் அத்திருமணத்தை ரத்து செய்யலாம் - ஆனால் அவர்களிடையே பாலுறவு ஏற்பட்டிருக்கக் கூடாது என்பது நிபந்தனை.

**இந்து சட்டம்:** குழந்தைத் திருமணம் செல்லத்தக்கது. திருமண வயது ஆணுக்கு - 21, பெண்ணுக்கு - 18 என்பது ஆலோசனைதானே தவிர சட்டம் அல்ல; வயதுக்கு வந்தபின் மனைவி இத்திருமணத்தை ரத்து செய்ய விரும்பினால், (வழக்கமான விவாகரத்து சட்ட விதிகள்படி) கணவன் தன்னைக் கொடுமைப்படுத்தியதாகவோ, கைவிட்டுவிட்டதாகவோ, அவனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதாகவோ நிரூபிக்க வேண்டும். இத்துடன் இசுலாமிய சட்டத்தில் உள்ள பருவம் வந்தபின் மணவிலக்கு செய்யும் உரிமையும் சேர்க்கப்பட்டுள்ளது.

### பலதார மணம

**இசுலாமியச் சட்டம்:** ஒரே நேரத்தில் 4 மனைவியரை மணந்து கொள்ள அனுமதிக்கிறது. ஐந்தாவதாக ஒரு பெண்ணை மணந்தாலும் அது செல்லத்தகாதது அல்ல; முறைகேடானது அவ்வளவே. ஐந்தாவது திருமணத்திற்குப்பின் ஏற்கனவே இருக்கின்ற நான்கு மனைவியரில் ஒருவரை விவாகரத்து செய்துவிட்டால் ஐந்தாவதாகச் செய்து கொண்ட முறைகேடான திருமணம் முறையானதாகிவிடும்.

**இந்து சட்டம்:** முதல் மனைவி ஒப்புதலுடன் மணக்கலாம். இருதார மணம் தடை செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் முதல் மனைவி வழக்கு தொடுக்கவில்லையெனில் இது சட்டவிரோதமாகாது. மேலும் இரண்டாவது மனைவியுடன் தனது கணவன் செய்து கொண்ட திருமணத்தில் சப்தபதி என்ற சடங்கு நடத்தப்பட்டதை முதல் மனைவி நிரூபித்தால்தான் குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கொள்ளப்படும்.

ஒரு மனைவிக்கு மேற்பட்டவர்கள் உயிருடன் இருந்தால் அவர்கள் அனைவரின் ஒப்புதலும் பெற்றுத்தான் தத்து எடுக்க வேண்டும் என்று 'இந்து தத்தெடுத்தல் சட்டம்' கூறுகிறது. பலதாரமணத்தை இந்து சட்டம் அங்கீகரிப்பதை இது மறைமுகமாகத் தெளிவுபடுத்துகிறது.

### மணமக்களின் சம்மதம

**இசுலாமியச் சட்டம்:** வயது வந்த ஆண் பெண்ணிடம் சம்மதம் பெற வேண்டும் என்பது விதி. ஆனால் வயது வந்த என்ற சொல்லுக்கு பருவம் வந்த என்று பொரு

படிப்பகம்

www.padippakam.com

பிரான்சில் மன்னராட்சி தூக்கியெறியப்பட்டு ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டதைக் கண்டவுடன், வரலாற்றின் விதியைப் புரிந்து கொண்டு, ஜனநாயக உரிமைகளை தத்தம் நாட்டு மக்களுக்கு முதலாளித்துவம் பெட்டியைத் திறந்து விநியோகத்துவிடவில்லை. ஐரோப்பிய தொழிலாளர்களும் விவசாயிகளும் கடுமையாகப் போராடித்தான் ஒவ்வொரு ஜனநாயக உரிமையையும் பெற்றார்கள்.

எனவே ஒவ்வொரு நாட்டின் விசேடமான வரலாற்றுச் சூழலைப் புரிந்து கொள்வது, அதை மாற்றியமைக்கத்தானேயொழிய ஏற்று நடப்பதற்கு அல்ல.

**ஈசுவர அல்லா தேரே நாம்**
**ஏமாந்தவனே இந்தியனாம்!**

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பில் பிறந்த இந்திய தேசியம், பனியா - தரகு முதலாளிகளின் நலன்களுக்கு ஏற்ற, பார்ப்பன - இந்து தேசியமாகவே தோன்றியது. அதற்கு முந்தைய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளான கட்டபொம்மனோ, மருது சகோதரர்களோ, கொண்டிருந்த இறை நம்பிக்கைக்கும், 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் திலகர் வகையறாவால் உருவாக்கப்பட்ட பாரதமாதா வழிபாட்டுக்கும் சம்பந்தமில்லை. 'காந்தி - இந்துமகாசபை பிராண்டு இந்து தேசியம்' தோற்றுவித்த எதிர்விளைவுதான் முஸ்லீம் தேசியம். இதை பிரிட்டிஷார் பயன்படுத்திக் கொண்டனர் என்பது வேறு விசயம்.

> மதசார்பின்மை, சோசலிசம் ஆகிய சொற்கள் இந்திய அரசியல் சட்டத்தின் முன்னுரையில் 1976-இல் தான் சேர்க்கப்பட்டன. ஆனால் மதசார்பின்மைக்கு அரசியல் சட்டத்தில் எந்த விளக்கமும் கிடையாது. அரசியல் நிர்ணயச் சட்ட நூலின் முதல் பக்கத்தில் வழுவழுப்பான தாளில் வண்ணத்தில் அச்சிடப்பட்டிருப்பதுதான் இந்த சொல்லுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிக பட்ச மரியாதை.

காங்கிரசின் இந்து தேசிய நீரோட்டத்தில் கலப்பதற்கு அஞ்சிய முஸ்லீம் மக்களுக்கு தம்மீது நம்பிக்கையை உருவாக்குவதற்காக காந்தி உருவாக்கிய 'சுதேசி' கோட்பாடுதான் 'சர்வதர்ம சமபாவ' - அல்லது 'ஈசுவர அல்லா தேரே நாம்'. அரசியல் சட்ட மொழியில் கூறினால் இந்திய மதசார்பின்மைக் கோட்பாடு.

இந்தக் கோட்பாடுதான் மதத் தனிநபர் சட்டங்களுக்கு அடிப்படையானது. இச் சட்டங்களோ நிலவுடமை ஆதிக்கம், தந்தை வழி ஆணாதிக்கம், சாதி, மத ஆதிக்கம் ஆகியவற்றைக் கருத்து ரீதியாகவும், சொத்துடைமை உறவுகளிலும் நிலை நாட்டுகின்றன. ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்த மக்களுக்குள்ளேயும் இருக்கின்ற பால், சாதிய ஏற்றத்தாழ்வுகளையும், மொழி, இன உணர்வுகளையும் பின்னுக்குத் தள்ளி நாடு முழுவதும் அவர்களை மதத்தின் அடிப்படையில் மறுசேர்க்கை செய்கின்றன.

அரசியல் சட்டத்தின் முன்னுரையில் கண்டுள்ளபடியே கூறுவதென்றாலும், இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு அல்ல; மதசார்பற்றதாக மாறும் லட்சியத்தைக் கொண்டிருக்கும் நாடு அவ்வளவுதான்.

கறாராகச் சொன்னால், இந்த மதசார்பின்மை என்ற சொல்லுக்கு அடிப்படை உரிமை என்ற தகுதியோ, வழிகாட்டும் கோட்பாடு என்ற கவுரவமோ கூடக் கிடையாது. அரசியல் நிர்ணயச் சட்ட நூலின் முதல் பக்கத்தில் வழுவழுப்பான தாளில் வண்ணத்தில் அச்சிடப்பட்டிருப்பதுதான் இந்த சொல்லுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகபட்ச மரியாதை.

• • •

**மரத்தில் மறைந்தது**
**மா மத யானை**

மதசார்பின்மை வரையறுக்கப்படாதது இருக்கட்டும், மதம் என்றால் என்னவென்று வரையறுப்பது மத உரிமையைத் தீர்மானிப்பதற்கு அவசியமாக இருந்தது. ஏனென்றால் ஆணாதிக்கத்திலிருந்து தொடங்கி சாதி ஆதிக்கம், நிலவுடமை ஆதிக்கம் வரையிலான அனைத்து வகை ஆதிக்கங்களுமே மத ஒழுக்கமாகவும்,

ளாதலால் 10 வயது சிறுமியைக் கூட பருவம் வந்த பெண் எனக் கூறி அவளது சம்மதத்தைப் பெற்றதாகக் கூறிவிட முடியும். அமீனா என்ற ஐதராபாத் சிறுமியை கிழட்டு அராபிய ஷேக்கிற்கு திருமணம் செய்து வைத்தது இப்படித்தான்.

**இந்து சட்டம்:** குழந்தை மணமாக இருக்கும் பட்சத்தில் அவர்களது காப்பாளர்களின் ஒப்புதலையும், அல்லது வயது வந்த மணமக்களாக இருப்பின் அவர்களது ஒப்புதலையும் ஏமாற்றியோ மிரட்டியோ பெற்றிருந்தால் கூட சடங்கு முடிந்துவிட்டால் திருமணம் செல்லும். மணமக்களின் 'ஒப்புதல்' என்ற அம்சத்திற்கே இந்து சட்டத்தில் இடம் கிடையாது. ''கட்டாயத் திருமணம் என்ற காரணத்தை காட்டி திருமணத்தை ரத்து செய்யவோ மணவிலக்கு பெறவோ முடியாது; ஏனென்றால் இந்து சட்டப்படி திருமணம் என்பது புனிதமானது'' என பல உயர்நீதி மன்றத் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### மண விலக்கு

**இசுலாமியச் சட்டம்:** கணவன் இதற்குக் காரணம் எதுவும் தெரிவிக்க அவசியமில்லை. மூன்று முறை தலாக் என்று கூறினால் போதுமானது. மனைவி, தன் கணவனை விவாகரத்து செய்ய விரும்பினால் வழக்கு தொடுத்து கீழ்க்கண்ட காரணங்களில் ஒன்றை நிரூபிக்க வேண்டும். 1. கணவனை நான்கு ஆண்டுகளாகக் காணவில்லை. 2. தன்னை பராமரிப்பதில்லை 3. ஆண்மையின்மை 4. மனநிலை பிறழ்வு 5. கொடுமைப்படுத்துதல்.

**இந்து சட்டம்:** இருவருமே மணவிலக்கு செய்துவிட விரும்பினால் செய்து கொள்ளலாம். யாரேனும் ஒருவர் மட்டுமே மணவிலக்கு செய்ய விரும்பினால் கீழ்க்கண்ட காரணங்களில் ஒன்றை நிரூபிக்க வேண்டும்: இரண்டாண்டுகள் தொடர்பின்றி விட்டுச் செல்லுதல், கொடுமைப்படுத்துதல், மதம் மாறியிருத்தல், பால்வினை நோய், தொழுநோய், 7 ஆண்டுகளாக காணாமல் போய்விடுதல், வேறு நபருடன் பாலுறுவு வைத்திருத்தல்.

### ஜீவனாம்சம்

**இசுலாமியச் சட்டம்:** விவாகரத்து செய்யப்பட்ட பெண் வேறொருவரை மணக்காமலும், கற்புநெறி பிறழாமலும் இருந்தால் மட்டுமே உண்டு. இது தொடர்பாக ஷாபானு தீர்ப்புக்கெதிரான வழக்குகள் உச்சநீதி மன்றத்தில் உள்ளன.

**இந்து சட்டம்:** கற்பிழந்தவள் என்று நிரூபிக்கப்படாமல் இருந்தால் உண்டு.

### மணவாழ்க்கைக்கு வெளியே பாலுறவு

**இசுலாமியச் சட்டம்:** ஆணுக்கு நான்கு மனைவியர் வரை உண்டு. பெண் தன் கணவனைத் தவிர வேறு நபருடன் உறவு கொண்டிருந்தால் இ.பி.கோ 494-வது பிரிவின்படி குற்றம்.

**இந்து சட்டம்:** திருமணமாகாத பெண்களுடன் கணவன் உறவு வைத்துக் கொள்ளலாம். ஆனால் மனைவியைப் பொருத்தவரை இது இ.பி.கோ. 494-வது பிரிவின்படி குற்றம்.

### குழந்தைகள் மீதான காப்பாளர் உரிமை

**இசுலாமியச் சட்டம்:** தந்தைதான் இயற்கையான காப்பாளர். தந்தை இறந்துவிட்டால் தந்தை வழிப் பாட்டான்.

**இந்து சட்டம்:** தந்தைதான் காப்பாளர். தந்தை இறந்தால் தாய். விவாகரத்து ஆகி பராமரிப்புக்காகக் குழந்தைகள் தாயிடம் விடப்பட்டாலும், காப்பாளர் தந்தைதான்.

படிப்பகம்

www.padippakam.com

மத சம்பிரதாயமாகவும், மதச்சட்டமாகவும் பின்னர் அதுவே அரசின் சட்டமாகவுமே பல நூற்றாண்டுகளாக இருந்து வந்துள்ளன. இந்த ஆதிக்க உணர்வுகளையும் மதவுணர்வுகள் என்றுதான் மதவாதிகள் கூறி வருகின்றனர். இதனடிப்படையில்தான் மத தனிநபர் சட்டங்களையும் நியாயப்படுத்தி வருகின்றனர்.

நவீன ''இந்தியக் குடியரசு'' அமையும் சந்தர்ப்பத்தில் இதற்கு முடிவு கட்ட விரும்பிய அம்பேத்கர், ''சாராம்சத்தில் மதத்தன்மை மட்டும் கொண்ட சில நம்பிக்கைகள், சம்பிரதாயங்களுடன் இணைந்த சில சடங்குகள்... ஆகியவற்றுடன் மதம் குறித்த நமது வரையறுப்பை நாம் நிறுத்திக் கொள்ள முயல வேண்டும்'' என்று கூறினார்.

''மதத்தின் சாரம் (தீன்) என்பதைப் பொறுத்தவரை வழிபாடு மற்றும் நம்பிக்கை தொடர்பான சடங்குகள்தான் (இபாதத், இதிகுவாதத்) மாற்றக் கூடாதவை; மற்றவை (அதாவது ஷாரியத் சட்டம் போன்றவை) மாறலாம்'' - என்ற நிலையை மவுலானா அபுல் கலாம் ஆசாத் மேற்கொண்டார்.

இந்து என்பது வெறும் மதமல்ல, அது ஒரு வாழ்க்கை முறை (சநாதன தருமம்) என்று கூறும் பார்ப்பன மதவாதிகளும், இஸ்லாம் என்பது மதமல்ல அது ஒரு மார்க்கம் (வாழ்க்கை நெறி) என்று கூறும் இசுலாமியப் பழமைவாதிகளும் இணைந்து நின்று அம்பேத்கரின் கருத்தை எதிர்த்தனர்.

பெரியாரைப் போன்று அம்பேத்கர் நாத்திகர் அல்ல, மனிதனின் ஆன்மீகத் தேவையை நிறைவு செய்ய மதம் அவசியம் என்ற கருத்து கொண்டவர் என்பதையும் இங்கே நினைவிற்கொள்ள வேண்டும். ஆன்மீக உரிமையைக் காட்டிலும் ஆதிக்க உரிமையில் அதிக நாட்டம் கொண்ட மதவாதிகள்தான் இறுதியில் வெற்றி பெற்றனர். மதம் மற்றும் மதஉரிமையை இன்னதென்று வரையறுக்காமல் அந்தப் பொறுப்பை பாராளுமன்றம் மற்றும் நீதித்துறையின் தோள்களுக்குத் தள்ளி விட்டது அரசியல் நிர்ணய சபை.

அன்று தொடங்கி இன்று வரை பாராளுமன்றம் அந்தப் பணியை மேற்கொள்ளவில்லை. கடந்த 40 ஆண்டுகளாக எது மத உரிமை, எது மத நம்பிக்கை என்பதை ஆய்ந்து தீர்ப்பு சொல்லும் வேலையை உச்சநீதிமன்றம்தான் செய்து வருகிறது.

### சுதந்திரமா சமத்துவமா?

அரசியல் சட்டத்தின் 25 மற்றும் 26-வது பிரிவுகள் வழங்குகின்ற மதச் சுதந்திரத்தின் அடிப்படையில் தான் அனைத்து மதங்களின் தனி நபர் சட்டங்களுமே அதிகாரம் பெறுகின்றன. அதாவது குறிப்பிட்ட மதத்தில் ஒரு இந்தியக் குடிமகன் பிறந்தான் என்ற காரணத்தைக் கொண்டு, பிறப்பு முதல் இறப்பு வரையிலான அவனது சிவில் வாழ்க்கையில் தலையிட்டு அதிகாரம் செய்யும் உரிமையை இந்தச் சட்டப் பிரிவுகள்தான் மதத்திற்கு அளிக்கின்றன.

அரசியல் சட்டத்தின் 14-வது பிரிவு சட்டத்தின் முன் அனைத்து குடிமக்களும் சமம் என்று கூறுகிறது; 15-வது பிரிவோ மதம், இனம், பால் வேறுபாடுகளுக்காக குடிமக்கள் யாரிடமும் அரசு வேற்றுமை பாராட்டக் கூடாது என்று கூறுகிறது.

குடிமகன் என்ற முறையில் ஒரு தனிநபரின் **சமத்துவ** உரிமையும், அந்தத் தனிநபரின் மேல் ஆதிக்கம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு உள்ள **சுதந்திரமும்** மோதிக் கொள்ளும் போது, - அதாவது ஷா பானுவின் மீது ஷரியத் ஆதிக்கம் செய்யும்போது, இந்துப் பெண்ணுக்கு சொத்துரிமை மறுக்கப்படும் போது - சட்டப்பிரிவு 25-ற்கும் 14-க்கும் இடையில் முரண்பாடு ஏற்படும்போது, அதாவது சுதந்திரமும் சமத்துவமும் மோதிக் கொள்ளும் போது நீதிமன்றம் என்ன செய்யும்?

> குடிமகன் என்ற முறையில் ஒரு தனிநபரின் சமத்துவ உரிமையும் (சட்டப் பிரிவு 25) அந்தத் தனிநபரின் மேல் ஆதிக்கம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு உள்ள சுதந்திரமும் (சட்டப்பிரிவு 14) மோதிக் கொள்ளும் போது நீதிமன்றம் என்ன செய்யும்?

### நீதிமன்றமே புரோகிதனாக

இந்த இடத்தில்தான் 'மதம்' என்பதற்கு உச்சநீதிமன்றம் அளித்துள்ள விளக்கங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

''மதத்தைக் கடைப்பிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும் சுதந்திரம்'' அளிக்கும் சட்டப்பிரிவு 25-இல் கண்டுள்ள **மதம்** என்ற சொல்லின் பொருளை விளக்கிய உச்ச நீதிமன்றம், வெறும் நம்பிக்கை மட்டும்தான் மதம் என்று கூறிவிட முடியாதென்றும் ஒரு மதத்தின் உயிராதாரமான விசயம் எது என்பதை அந்தக் குறிப்பிட்ட மதத்தின் கோட்பாடுகளைக் கொண்டுதான் தீர்மானிக்க முடியும்'' என்றும் கூறியது.

''எந்த ஒரு பிரிவினரும் தங்களது மதம் சம்பந்தப்பட்ட விவகாரங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளும் உரிமையை'' வழங்குகின்ற சட்டப்பிரிவு 26 (b)-இல் கண்டுள்ள ''மதம் சம்பந்தப்பட்ட விவகாரம்'' என்ற சொற்கோர்வையை உச்ச நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வியாக்கியானம் செய்தது.

''இந்த இடத்தில் மதம் என்பது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல; உணவு, உடை உள்ளிட்ட என்னென்ன பழக்க வழக்கங்களை அந்தச் சமூகம் மதத்தின் அங்கமாகக் கருதுகிறதோ அவையெல்லாமே சேர்ந்ததுதான் மதம்''.

''அதே போல ''கோயிலில் யார் யார் நுழைந்து வழிபாடு நடத்தலாம், அவர்கள் எந்த இடத்தில் நிற்க வேண்டும் என்பதும் மத சம்பந்தப்பட்ட விவகாரம் தான்''.

### அனைத்து அதிகாரமும் மத குருமாருக்கே!

குறிப்பிட்ட மதத்தில் நம்பிக்கையுள்ள ஒரு இந்தியக் குடிமகன், மேற்படி விதிமுறைகளைக் கடைப்பிடிக்க மறுத்தால் அவனை ''மதத்தின் அடிப்படையில் சமூகப் புறக்கணிப்பு செய்யும் உரிமையும் மதகுருமார்களுக்கு உண்டென்றும் அது ''தனது சிவில் உரிமையைப் பாதிப்பதாக'' ஒரு குடிமகன் முறையிட முடியாதென்றும் உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வாறாக, மதம் என்பதற்கு உச்ச நீதி மன்றம் கூறியுள்ள விளக்கங்கள் அனைத்துமே ,ஒரு குடிமகனின் சமூக வாழ்க்கை மீது மதம் செலுத்தும் அதிகாரத்திற்கு சட்ட அங்கீகாரம் தருபவை; மதத்தைத் தனிநபரின் நம்பிக்கை என வரையறுக்கும் மதசார்பின்மைக் கோட்பாட்டுக்கு எதிரானவை. எனவே குடிமகனின் சமத்துவ உரிமைக்கும் மதத்தின் சுதந்திரத்திற்குமான மோதலில் உச்சநீதி மன்றம் மதத்தைத்தான் ஆதரித்து வருகிறது.

### மதத்தின் ஒழுக்கமும் அரசின் ஒழுக்கமும்

.இருப்பினும், பொது ஒழுங்கு, நலவாழ்வு மற்றும் ஒழுக்க நெறி ஆகியவற்றின் அடிப்படையில் மதச் சுதந்திரத்தை முறைப்படுத்தும் உரிமை அரசுக்கு இருப்பதாக சட்டப்பிரிவு - 25 (1) கூறுகிறது.

நல்லொழுக்கத்தின் மொத்தக் குத்தகை தாரரான மதத்திடமிருந்து ஒழுக்கத்தை நிலை நாட்டும் உரிமையை அரசு கைப்பற்றிக் கொள்ளும் இந்தச் சட்டப்பிரிவு மேற்கத்திய ஜனநாயக, மற்றும் மத சார்பின்மைக் கோட்பாட்டின் ஒரு முக்கியமான அம்சமாகும்.

இந்துக் கோயில்களின் கருவறையில் பார்ப்பனரல்லாதார் நுழைவதற்கு நிலவும் தடை, கிறித்தவப் பெண்கள் மணவிலக்கு பெறுவதில் உள்ள ஆகப் பிற்போக்கான தடைகள், இசுலாமிய ஆண்க



படிப்பகம்

www.padippakam.com

ளின் நான்கு தார மண உரிமை போன்ற ஒழுக்கக்கேடான மத சம்பிரதாயங்களை, அரசு தனது கையில் வைத்திருக்கும் ஒழுக்க நெறியை நிலை நாட்டுவதற்கான அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒழித்திருக்கலாமே! ஏன் செய்யவில்லை? ஏனென்றால், 'சர்வ தர்ம சம பாவ' என்ற மண்ணுக்கேற்ற' மதசார்பின்மைக் கோட்பாட்டின் ஒளியில்தான் ஒழுக்க நெறி குறித்த தனது வரையறைகளை அரசு ஏற்படுத்திக் கொள்கிறது. அதாவது மதத்தின் ஒழுக்க நெறியே அரசின் ஒழுக்க நெறி!

**இமாலயப் பொய்**

தேவதாசி முறை, உடன் கட்டையேறுதல் (சதி), பலதார மணம், ஆகிய கொள்கைகளனைத்தும் இந்து மதத்தின் பிரிக்கவொண்ணாத கோட்பாடுகளாக இருந்தவை தான். இதை சங்கராச்சாரி முதல் சத்திய மூர்த்தி வரை பலரும் தெளிவு படுத்தியுள்ளனர். எனினும், மேற்கூறிய மத சம்பிரதாயங்களைத் தடை செய்ய வேண்டிய சமூக நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது ஒழுக்கத்தை நிலை நாட்டுவதற்காகவே சட்டப்பிரிவு 25 (1) தனக்களித்திருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்து மதத்தின் 'தீய ஒழுக்கங்களை' அரசு ஒழிக்கவில்லை. மாறாக, "இந்தப் பழக்கங்கள் இந்து மதத்தின் சாராம்சமான கோட்பாடுகள் அல்ல;" என்று ஒரு இமாலயப் பொய்யைச் சொல்லி அதனடிப்படையில் தடை செய்தது.

இவ்வாறு புளுகியதன் நோக்கம் இந்து மதத்தின் கவுரவத்திற்குக் களங்கம் வந்து விடக் கூடாதே என்ற அச்சம் மட்டுமல்ல; மதத்திற்கு ஒழுக்க நெறியைக் கற்பிக்கும் பணியைச் செய்வதன் மூலம், மதச் சுதந்திரத்தில் தலையிடும் ஒரு 'தவறான' முன் மாதிரியை உருவாக்கி இந்திய மதசார்பின்மைக் கோட்பாட்டின் அடிப்படையைத் தகர்க்க அரசு, (அதாவது நீதிமன்றம் உள்ளிட்ட அரசு) விரும்பவில்லை என்பதுதான்.

**பார்ப்பனச் சூது!**

வேறொரு கோணத்திலிருந்து இதைப் பரிசீலிப்போம். இந்துக் கோயில்களின் உள்ளே நுழைந்து வழிபாடு நடத்த தாழ்த்தப்பட்டோருக்கு அனுமதி இல்லை என்று விதியும், பார்ப்பனரல்லாதார் கருவறைக்குள் நுழைய முடியாது என்ற விதியும் ஆகம விதிகளில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன.

சமூக நிர்ப்பந்தங்கள் காரணமாகவும், அரசியல் நோக்கத்திற்காகவும் தாழ்த்தப்பட்டோர் ஆலய நுழைவை ஏற்க நினைத்த சனாதனிகள் (அரசு) முதலில் சங்கராச்சாரி உள்ளிட்ட பார்ப்பன குருமார்களிடம் இதற்கு ஒப்புதல் பெற்றுக் கொண்டனர். இது மதவாதிகளுடனான சமூக ரீதியான சமரசம்.

அடுத்து சட்டரீதியாக இதை அமல்படுத்தும் போது தேவதாசி ஒழிப்புக்குக் கூறியதைப் போல "ஆகம விதிகள் என்பவை இந்து மதத்தின் சாராம்சமான கோட்பாடுகள் அல்ல" என்று வியாக்கியானம் செய்து நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யப் போனால் கோயில்களின் மீதான அதிகாரத்தையே பார்ப்பனர்கள் இழக்க நேரும்.

எனவேதான் மத சுதந்திரத்தை வழங்கும் சட்டப்பிரிவு 25-இல் உட்பிரிவு (2) சேர்க்கப்பட்டது. "தாழ்த்தப்பட்டோரை கோயிலுக்குள் அனுமதிப்பது மதசுதந்திரத்தைப் பாதிப்பதாகாது" என உட்பிரிவு கூறுகிறது. மேல் பார்வைக்கு தாழ்த்தப்பட்டோரின் உரிமையைப் பாதுகாப்பதற்கான ஷரத்து போலத் தோற்றமளிக்கும் இந்த உட்பிரிவின் உண்மையான நோக்கம் ஆகமவிதிகளைப் பாதுகாப்பதுதான்.

> அரசியலிலிருந்து மதத்தைப் பிரிக்கும் மேற்கத்திய மதச்சார்பின்மையைக் காலினிய சிந்தனை என்று பாரதீய ஜனதாவும், இந்திய சூழ்நிலையைக் கணக்கில் கொள்ளாத 'வறட்டுத் தனம்' என்று போலிக் கம்யூனிஸ்டுகளும் கூறுகின்றனர். ஒரு நாட்டின் விசேடமான வரலாற்றுச் சூழலைப் புரிந்து கொள்வது, அதை மாற்றியமைக்கத்தானேயொழிய ஏற்று நடப்பதற்கு அல்ல.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராக 1970-இல் தி.மு.க. அரசு இயற்றிய சட்டம், மதச்சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்றும், 'ஆகம விதிகளின்படி தீண்டாமை என்பது ஒரு மத உரிமை" என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறிய போது தான் இந்தச் சூட்சுமம் அம்பலத்திற்கு வந்தது.

இந்து மத சம்பிரதாயங்களில் அரசு **தலையீடு** செய்து பல விசயங்களைத் திருத்தியமைத்துள்ளதென்றும், பிறர் (முஸ்லீம்கள்)தான் இதை அனுமதிக்க மறுக்கிறார்கள் என்றும் பா.ஜனதா முதல் நீதிபதி குல்தீப் சிங் வரை பலரும் பிரச்சாரம் செய்கின்றனரே, அந்த **'அரசுத்தலையீட்டின்'** சட்ட ரீதியான லட்சணம் இது தான்.

மதம் மற்றும் மத உரிமை குறித்து இதுவரை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளின் சாரம் வருமாறு:

"மதம் மற்றும் மதஉரிமை பற்றி எல்லா மதங்களுக்கும் பொதுவான எந்த ஒரு வரையறையையும் அரசு ஏற்படுத்த முடியாது. எனவே எல்லா மதத்தினரின் உரிமைகளும் சமமானதோ, ஒரு சீரானதோ அல்ல. (அதாவது கத்தி வைத்துக் கொள்ளும் சீக்கியனின் மத உரிமை தனக்கும் வேண்டுமென ஒரு முஸ்லீம் கோர முடியாது)

ஒரு குடிமகனின் மதசார்பற்ற உரிமையைக் காட்டிலும் மதத்தின் உரிமையே மேலானது."

**பாரதீய ஜனதாவின்**
**பொருள் பொதிந்த மவுனம்**

ஆயினும், 'பொது ஒழுங்கு, நல வாழ்வு, ஒழுக்கநெறி' ஆகியவற்றின் பெயரால் மதச்சுதந்திரத்தில் தலையிட்டு கட்டுப்படுத்துவதற்கு அரசிற்கும் நீதிமன்றத்திற்கும், சட்டப்பிரிவு 25,26-இல் உரிமை இருக்கத்தான் செய்கிறது.

மதவிவகாரங்களில் அரசுத் தலையீட்டை எதிர்க்கும் பாரதீய ஜனதா கும்பல், அரசின் இந்த அதிகாரத்தைப் பறிக்க வேண்டுமென ஏன் கோரவில்லை என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகிறது.

இவ்வாறு செய்வது இசுலாமிய, கிறித்தவ மதங்களின் மீது அதிகாரம் செலுத்துவதற்கான வாய்ப்பை அரசிடமிருந்து பறித்துவிடும் என்பது ஒரு காரணம். மேலும், அரசின் செல்வாக்கிலிருந்து மதத்தை விடுவிப்பதல்ல அக்கட்சியின் நோக்கம்; மதத்தின் சித்தாந்தச் செல்வாக்கின் கீழ் அரசைக் கொண்டு வர முயலும் ஒரு பாசிசக் கட்சியே அது. எனவே அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இந்தச் சட்டப்பிரிவுகள் தனக்குத் தடையாக இல்லாதவரையில் இவற்றை எதிர்க்க வேண்டிய அவசியம் பாரதீய ஜனதாவிற்கு இல்லை.

செங்கல் ஊர்வலம் நடத்துவதற்கும், ரதயாத்திரை நடத்துவதற்கும், கடப்பாறையுடன் விநாயகர் ஊர்வலம் என்ற பெயரில் கலவரம் நடத்துவதற்கும், மகா ஆராத்தி என்ற பெயரில் வழிபாட்டுக் கூட்டம் நடத்தி வன்முறையைத் தூண்டுவதற்கும் பாரதீய ஜனதா இந்து முன்னணிக்கும்பலுக்கு மதச்சுதந்திரத்தை அளிப்பவை சட்டப்பிரிவு 25,26-ம் தான்.

'பொது ஒழுங்கு, ஒழுக்க நெறி, நல வாழ்வு' ஆகிய காரணங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகளை அரசோ, நீதிமன்றமோ தடுத்ததில்லை எனும்போது அரசின் இந்த 'காகித அதிகாரம்' குறித்து பாரதிய ஜனதா கவலை கொள்ள அவசியமில்லை.

அரசு அவ்வாறு தலையிட முயன்ற சந்தர்ப்பங்களில், எடுத்துக்காட்டாக, பாபர் மசூதியா - இராம ஜன்ம பூமியா என்ற கேள்வியை உச்சநீதிமன்றத்தின் முடிவுக்கு ராவ் அரசு அனுப்பியபோது "மத நம்பிக்கை குறித்த விசயங்களில் எந்த நீதிமன்றமும் தீர்ப்பு வழங்க இயலா

படிப்பகம்

www.padippakam.com

து'' என்று அறிவித்ததன் மூலம் சட்டப் பிரிவு 25,26-இன்படி உச்சநீதிமன்றத்திற்குரிய அதிகார வரம்பை பாரதீய ஜனதா நினைவுபடுத்தியது.

இறுதியாக கடந்த ஜூலை மாதம் வெளியான உச்சநீதிமன்றத் தீர்ப்பொன்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

**நீதிமன்றத்தின் ஒப்புதல் வாக்குமூலம்**

''முஸ்லீம்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க எனக்கு வாக்களியுங்கள்'' என்று சுவரொட்டி வெளியிட்டு தேர்தல் பிரச்சாரம் செய்து வெற்றி பெற்றதால், தாஸ் ராவ் தேஷ்முக் என்ற சிவசேனா எம்.எல்.ஏ. தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று பம்பாய் உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியிருந்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்தார் தேஷ்முக். மதத்தின் பேரால் ஓட்டுக்கேட்டதற்காக அல்ல, முஸ்லீம் எதிர்ப்பைத் தூண்டியதற்காக தேஷ்முக்கின் தேர்தல் செல்லாது என உச்சநீதிமன்றமும் உறுதி செய்தது. நீதிபதிகள் ஜி.என்.ரே, பைசானுதீன் ஆகியோர் கீழ்க்கண்ட கருத்துக்களையும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

''இத்தகைய கட்சிகள் தேர்தலிலும் பாராளுமன்றத்திலும் பங்கேற்பதை சட்டம் அங்கீகரிக்கின்ற வரையில் இந்தச் சூழ்நிலையை (அதாவது மதத்துவேசம் தூண்டப்படுவதை) தவிர்க்க இயலாது.''

பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து பா.ஜனதாவின் மாநில அரசுகள் டிஸ்மிஸ் செய்யப்பட்டதை உறுதி செய்த தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்ற பெஞ்சின் பெரும்பான்மை நீதிபதிகள் நமது அரசியல் சட்டத்தின்படி, ''மதமும் அரசியலும் கலக்கக் கூடாது'' என்று குறிப்பிட்டனர்.

தற்போதைய தீர்ப்போ, அரசியல் நோக்கத்திற்கு மதத்தைப் பயன்படுத்துவதை நிலவுகின்ற அரசியல் சட்டம் அங்கீகரிக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

மதத்தை அரசியல் நடவடிக்கையாகவும், அரசியலை மதச் சடங்காகவும் ஒரே நேரத்தில் நடத்துவதற்கு வாய்ப்பளிக்கும் இந்த 'மதசார்பற்ற' அரசியல் சட்டத்தை பாரதீய ஜனதா ஏன் எதிர்க்கப் போகிறது?

அனைத்து மதங்களுக்கும் சம உரிமை தருவதாகக் ஏட்டளவில் கூறுகின்ற இம் மதசார்பின்மை, பார்ப்பன - இந்து ஆதிக்கத்தைத்தான் தனது நடைமுறையாகவும் கொண்டுள்ளது. இந்தப் போலி மதச்சார்பின்மையின் கீழ் சிவில் சட்டத்தை மட்டும் உண்மையிலேயே மதச்சார்பற்றதாக மாற்ற வேண்டும் என்கிறது பாரதீய ஜனதா.

ஆனால் நிலவுகின்ற மதச்சார்பின்மை சட்டரீதியிலேயே போலியானது என்று எந்தக் கட்சி கூறுகிறது? காங்கிரஸ், வலது-இடது கம்யூனிஸ்டு கட்சிகள், திராவிட இயக்கங்கள் மற்றும் முஸ்லீம் லீக் வரை அனைத்துக் கட்சிகளுமே இந்த மதசார்பின்மையைப் போற்றிக் கொண்டாடுகின்றன.

இந்த மதச்சார்பின்மையை ஏற்றுக் கொள்ளும் கட்சிகள் 'மதசார்பற்ற சிவில் சட்டம்' வேண்டுமென்று பா.ஜனதா கோருவதை மட்டும் எப்படி எதிர்க்க முடியும்? அல்லது தங்களது எதிர்ப்பை அரசியல் ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் அவர்கள் எங்ஙனம் நியாயப்படுத்த இயலும்?

அதனால்தான் . தடுமாறுகிறார்கள், மழுப்புகிறார்கள். 'அஞ்சாதீர்கள்' என்று முஸ்லீம் பழமைவாதிகளுக்கு ஆறுதல் கூறுகிறார்கள். மொத்தத்தில் தங்களது நடவடிக்கைகள் மூலம் 'இந்த நாட்டில் முழு

மதத்தை அரசியல் நடவடிக்கையாகவும், அரசியலை மதச் சடங்காகவும் ஒரே நேரத்தில் நடத்துவதற்கு வாய்ப்பளிக்கும் இந்த 'மதச்சார்பற்ற' அரசியல் சட்டத்தை பாரதீய ஜனதா ஏன் எதிர்க்கப் போகிறது?

நிறைவான மதசார்பின்மையை அமல்படுத்தத் தடையாயிருப்பவர்கள் முஸ்லீம்கள் தான்' என்ற கருத்தை மறைமுகமாகத் தோற்றுவித்து வருகிறார்கள். இத்தகைய கருத்து பெரும்பான்மையின் மத்தியில் உருவாக்கப்படுவதைத்தான் இந்து மத வெறியர்களும் விரும்புகிறார்கள்.

**பா.ஜனதாவின் அதே தந்திரம்! எதிர்க் கட்சிகளின் அதே தடுமாற்றம்!**

இதற்கிடையில் தாங்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் மட்டும் பொதுசிவில் சட்டத்தை அறிமுகப்படுத்தப் போவதாக பா.ஜனதா அறிவித்துள்ளது. ''ஒரு சீரான உரிமையியல் சட்டத்தைக் கொண்டுவர அரசு முயல வேண்டும்'' என்ற ''அரசியல் சட்டத்தின் 44-வது பிரிவின் வாசகத்தில் உள்ள அரசு என்ற சொல்லுக்கு 'மாநில அரசு' என்று பொருள் கூறுவதன் மூலம் இதைச் செய்ய முடியும்'' என்று கூறுகிறார் சட்டவல்லுனர் ராஜீவ் தவான்.

அதற்குப்பின் கவர்னர் அதில் கையெழுத்திட மறுக்கலாம், ஜனாதிபதி ஒப்புதல் தராமல் நிறுத்தலாம் அல்லது உச்சநீதிமன்றத்தில் இடைக்காலத் தடை வாங்கலாம். ஆனால் எதைச் செய்தாலும் அது இடைக்கால ஏற்பாடாக மட்டுமே இருக்கும்.

அரசியல் சட்டம் தனக்களித்த உரிமைகளைப் பயன்படுத்தித்தான் இந்து மத வெறியர்கள் பாபர் மசூதியை இடித்தனர். பாபர் மசூதி தரைமட்டமாக்கப்படும் வரை 'அது மசூதிதான் - கோயிலல்ல' என்று பேசிவந்த எதிர்க்கட்சிகள், இப்போது மசூதியா - கோயிலா? என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு சொல்வதற்காகக் காத்திருக்கிறார்கள். கரசேவைக்கெதிரான மக்கள் திரள் நடவடிக்கையில் ஈடுபட எந்தக் கட்சிக்கும் துணிவு இல்லை. பாபர் மசூதி விவகாரத்தில் எப்படிக் காய்களை நகர்த்தியதோ அதே முறையைத்தான் இப்போதும் பா.ஜனதா பின்பற்றுகிறது.

பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பயன்படுத்தித்தான் அதற்குக் குழி தோண்டினான் இட்லர். இந்த 'ஜனநாயகத்தையும்' 'மதச்சார்பின்மையையும்' பயன்படுத்தித்தான் இந்து ராஷ்டிரத்தை அமைப்பதற்கு பா.ஜனதாவும் முயற்சிக்கிறது.

ஒரே சட்டத்தின் மூலம் ஒரே நாட்டையும் மக்களையும் செதுக்கி உருவாக்க நினைக்கிறது.

இந்தப் போலி ஜனநாயகம் பாசிசமாக உருமாறுவதும், போலி மதச்சார்பின்மை இந்து ராஷ்டிரத்தை நோக்கி நகர்வதும் ஒன்றும் அதிசயமல்ல; போலி மதசார்பின்மைக்குப் பல் முளைத்திருக்கிறது - அதுதான் இந்து ராஷ்டிரம். அதன் குழந்தைப் பருவத்தை எண்ணி ஏங்குவது கையறுநிலை; அதை மீண்டும் கொண்டு வரமுடியுமென நம்பிக்கை வைப்பது முட்டாள்தனம்.

அரசியல், கல்வி மற்றும் சமூக வாழ்வின் பல்வேறு துறைகளில் மனிதனின் மீது ஆதிக்கம் செய்வதற்கு மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான அதிகாரத்தையும் உரிமையையும் ரத்து செய்ய வேண்டும். தனி நபரின் நம்பிக்கை என்ற அளவில் மட்டுமே மதச்சுதந்திரம் அங்கீகரிக்கப்பட வேண்டும். இத்தகைய உண்மையான மதசார்பின்மைக் கொள்கையை நிலைநாட்டவும், அதன் பிரிக்க வொண்ணாத அங்கமான 'மதசார்பற்ற உரிமையியல் சட்டத்தை' நிறைவேற்றச் செய்யவும் வேண்டும். புரட்சியாளர்களும், ஜனநாயக வாதிகளும், முற்போக்காளர்களும் முன்வைத்துப் போராட வேண்டிய கோரிக்கை இதுதான்.

ஆனால் முஸ்லீம் பழமைவாதிகள், சீர்திருத்தவாதிகள், திராவிட இயக்கங்கள், புதிய இடது சாரி 'அறிஞர்கள்' போன்ற பலரும் இதை ஏற்பதில்லை. இவர்களது கருத்துக்களையும் அவற்றுக்கான நமது விளக்கங்களையும் அடுத்த இதழில் பார்ப்போம்.

**(அடுத்த இதழில் முடியும்)**



படிப்பகம்

www.padippakam.com

## நூல் அறிமுகம்

# எல்லைதாண்டா அகதிகள்

சட்டப்படி அந்த உழைப்பாளிகளுக்குச் சொந்தப் பூமி இல்லை. ஆனால் உழைப்பின் உரிமைப்படி அந்த லட்சக்கணக்கான உழைப்பாளிகளுக்கு இலங்கை மலையகம்தான் சொந்த இடம். இனக் கலவரங்கள் நடந்த போதெல்லாம் தாக்கப்பட்டு நொறுக்கப்பட்டு எல்லை தாண்டாத நிரந்தர அகதிகளாகவே அவர்கள் வாழ்கிறார்கள். மலையகத் தமிழ் உழைப்பாளி மக்களின் வாழ்க்கைப் போராட்டமும் வேதனையும் இதுதான்.

அவர்களின் வேதனையை, போராட்டத்தைச் சித்தரிக்கும் இலக்கியங்களில் ஒன்று 94-ல் வெளிவந்துள்ள மாத்தளை சோமுவின் நாவல் 'எல்லை தாண்டா அகதிகள்'.

1983 மாத்தளை மக்குவாரித் தோட்டத்தில் இனக் கலவரத்தால் ஏற்பட்ட அழிவை இந்நாவல் சித்தரிக்கின்றது. பாட்டன் - பூட்டன் பரம்பரையாகப் பெருந்தோட்ட உழைப்பாளிகள்; அந்நாட்டுக்காகவே உழைத்தார்கள்; தேயிலைத்தாளுக்கு அடியில்தான் அந்த மூதாதைகளைப் புதைத்தார்கள்; அந்த லயத்து மக்கள் வாழ்க்கை பூராவும் சேமிக்க ஒன்றுமில்லாதவர்கள்; அதிகபட்சம் தாங்கள் பெற்ற எதற்கும் பயனற்ற 'சிட்டிசர்சிப் கோப்பி'யை (குடியுரிமைச் சான்று ஆவணம்) மட்டுமே, அவை கலவரங்களில் எரிக்கப்படும் வரை, சொத்தாகப் பொத்திப் பாதுகாத்தார்கள். அவர்களது காதல், திருமண வாழ்க்கை எளியது.

நாவலாசிரியர் இந்த வாழ்க்கைச் சாரத்தைக் கொண்டு வருவதோடு முக்கியமான வேறொரு பிரச்சனையை, வேறொரு கோணத்தை முயன்றிருக்கிறார். மாலினி - சிங்காரம் என்ற சிங்கள - தமிழ் சோடியை வைத்து நாவலைப் பின்னியுள்ளார். இனக் கலவரத்தின் போது கலப்பு மணச் (இனம் கலந்த) சோடி சந்திக்கும் பிரச்சனைகள், சிக்கல்கள், மன உளைச்சல்களை மையமாக்கி நாவல் எழுதப்பட்டுள்ளது.

சிங்கள இனவெறி ஆட்டத்தோடு நாவல் தொடங்குகிறது. தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் லயத்தின் மீதும் தாக்குதல் வரலாம் என்று அதைத் தடுக்க திட்டம் போடுகிறார்கள். இங்கேயே சிங்காரம் - மாலினி சோடி அறிமுகம் செய்யப்படுகிறது. சிங்காரம்தான் முதல் ஆளாக எதிர்த்து நிற்கப் போகிறேன் என்கிறான். கூட்டத்தில் கேலி எழுகிறது. ''வீட்டுக்குள்ள சிங்களத்திய வச்சிக்கிட்டு வெளிய சிங்களவன எதுக்க போராராக்கும், இத நம்ப முடியுமா?'' சிங்காரத்துக்கு ஆதரவாக அறுபது வயசுப் பிச்சைக்கிழவன் பரிந்து பேசி கேலிகளை அடக்குகிறான். கிழவன் அனுபவஸ்தன், அவன் பேச்சை லயம் மதிக்கிறது.

காம்பராவுக்குத் (அறை) திரும்பும் சிங்காரம் மாலினியைச் சமாதானப்படுத்துகிறான். 'உங்கள் மேல் உள்ள நம்பிக்கையில்தான் வந்தேன். நீங்கள்தான் எனக்கு எல்லாமே'' என்று மாலினி பேசுகிறாள். அன்று அவள் முதன்முறையாக அப்படிப் பேசுகிற பேச்சு பின்னால் அவள் வாழ்க்கையில் வீசப் போகிற புயலை முன் அறிவிக்கிறது. லயத்தின் காவலுக்கு வருபவர்களுக்கு நடு இரவிலும் டீ தயாரித்துக் கொடுக்கிறாள் மாலினி. சிங்காரம் அவளது ஒத்துழைப்பை மெச்சிப் பெருமிதப்படுகிறான். மாலினியைக் காதலித்தது, தகப்பன் அதற்காக தன்னை வீட்டைவிட்டு வெளியேற்றியது, எல்லாம் சிங்காரத்தின் நினைவுக்கு வருகிறது. இந்த ஆசுவாசங்கள் விரைவிலேயே தகருகின்றன. அவர்களின் லயம் தாக்கப்படுகிறது. மாலினியின் அண்ணன் அதைத் தலைமை தாங்கி நடத்துகிறான். ஒரு கும்பல் சிங்காரத்தைத் தாக்குகிறது. மாலினி பாய்ந்து அடியை வாங்கிக் கொள்கிறாள். ஒருபுறம் மாலினி மீது பாசம், பிடிப்பு; இன்னொரு புறம் மாலினி அண்ணன் செய்த செயலை எண்ணி அவள் மீது 'கரு'க்கட்டும் கசப்புணர்வு. லயம் எரிக்கப்படுகிறது; பிச்சைக் கிழவன் தாக்கப்படுகிறார்; தோட்டத்து மக்கள் மாரியம்மன் கோயிலின் அகதிகள் முகாமுக்குச் செல்கிறார்கள்; சிங்காரத்தின் மனத்தில் விழுந்த கசப்பு பெருகுகிறது.




அகதிகள் முகாமில் மக்களின் நிலை, அவர்கள் சொல்லும் கண்ணீர்க் கதைகள் சிங்காரத்தின் மனத்தில் முளைவிட்ட குற்ற உணர்வை விசிறிவிடுகின்றன. மாலினியிடம் இருந்த பாசம் மெல்ல மெல்ல தொலைவுக்கு விலகுகிறது. மாலினியோடு தேர் பார்க்க வந்து விளையாடிய நாட்கள், மூடிய தேரைப் பார்க்கும் போது நினைவில் பூத்து சிங்காரத்தை சித்திரவதை செய்கின்றன. அகதி முகாமின் மல்லிகைத் தோட்டம் சிவனொளி பாத மலைக்குச் சென்றபோது மாலினியைத் தான் சிங்கள வெள்ளை உடையில் வரச் சொன்னதும் அவள் வெள்ளைத் தேவதையாக எதிரே வந்து நின்றதும் சிங்காரத்தின் ஞாபகத்தில் மேல் எழுகின்றன. அவள் தவறுகளே செய்யவில்லை; ஆனால் அவளது இனம் தமிழினத்தின் மீது அழிவுக் கலகத்தை நடத்துகிறது; அவளை விட்டுப் பிரிந்து நிற்பது பெரிய துயரம் ஒன்றும் அல்ல என்று சிங்காரம் தேற்றிக் கொள்கிறான்.

குற்றவுணர்வு அலைக் கழிக்க விட்டுப் பிரிவதாக அவளிடமே அறிவிக்கிறான் சிங்காரம். அப்போதும் மாலினியிடம் திரும்பும் நினைப்புகள் அவனிடம் தொக்கி இருக்கவே செய்கின்றன.

அகதிகள் முகாமுக்கு வரும் பியதாச - லச்சுமி சோடி, அந்தச் சூழலிலும் ஒருவர்க்கொருவர் தெரிவித்துக் கொண்ட பாசம், உறுதிப்பாடு சிங்காரத்திற்கு பொறி தட்டி எழுகிறது. குற்றவுணர்வு சமனப்பட்டு சிங்காரம் மாலினியைச் சந்திக்க ஓடுகிறான்.

சிங்களவனும் சரி, தமிழனும் சரி மேல் வர்க்கத்தவர்கள் தோட்ட உழைப்பாளிகளை 'பறத்தமிழு'' என்றும் 'திருந்தமாட்டானுக'' என்றும் சாதி ரீதியாகப் பழிப்பதைச் சுட்டிக் காட்ட ஆசிரியர் தவறுவதில்லை. ஒடுக்கும் இனம் மற்ற இனத்தின் ஒடுக்கும் வர்க்க குணங்களை, சாதி ஒடுக்குமுறையை அப்படியே வாங்கிக் கொள்வதை ஆசிரியர் இயல்பாகச் சித்தரிக்கிறார்.

மாத்தளை சோமுவின் இந்நாவல் மண் உரிமை உள்ளவர்கள் நிரந்தர அகதிகளாகும் அவலத்தை வெட்டவெளிச்சமாக்குகிறது. ஈழத் தமிழர் பிரச்சனையில் அக்கறை உள்ளவர் எவரும் தோட்டத்து தமிழர் பிரச்சனைகளைச் சிந்திக்காமல் போக முடியாது. அவர்களது இலக்கியத்தையும் கற்று அறியாமல் இருக்க முடியாது.

● குப்பண்ணன்

நாவல்: எல்லை தாண்டா அகதிகள்
ஆசிரியர்: மாத்தளை சோமு
வெளியீடு: தமிழ்க்குரல் பதிப்பகம்,
26, தஞ்சாவூர் குளத்தெரு,
சின்னக்கடை வீதி,
திருச்சி - 620 002.
விலை: 40/-

படிப்பகம்

www.padippakam.com

## மணிரத்தினம் இல்லக் குண்டு வெடிப்பு

# குற்றவாளிகள் யார்?

இயக்குனர் மணிரத்தினத்தின் இல்லத்தில் குண்டு வீசப்பட்டது தொடர்பாக இசுலாமிய தீவிரவாத அமைப்புகளைச் சந்தேகிப்பதாகப் போலீசு கூறுகிறது. ஆனால் பம்பாய் திரைப்படத்தை விமரிசித்து வெளிவந்த 'புதிய கலாச்சாரம்' இதழின் பழைய பிரதிகளை எல்லாப் பிரிவு உளவுத் துறையினரும் எமது அலுவலகத்திலிருந்து வாங்கிச் சென்றனர்; எமது அச்சக உரிமையாளரை மிரட்டியுள்ளனர். பொய் வழக்கு போடுவது காவல்துறைக்குப் புதிதல்ல. ஒருவேளை 'பம்பாய்' திரைப்பட விமரிசனம் மணிரத்தினத்துக்கு எதிரான துவேசத்தை குற்றவாளிகள் மனதில் உருவாக்கி குண்டு வீசத் தூண்டியது' என்று கூடக் குற்றம் சாட்டலாம். காவல்துறை அவ்வளவு நாணயமாக நடந்து கொண்டால் நாம் பெரும கிழ்ச்சி அடைவோம்.

இது ஒருபுறமிருக்க, இந்தக் குண்டு வீச்சு சம்பவத்துக்குப் பின் மணிரத்தினம், மனிஷா கொய்ராலா ஆகியோர் மதநல்லிணக்கத்துக்காக உயிரைப் பணயம் வைத்த வீரர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். மத வெறியை எதிர்த்ததற்காக உண்மையிலேயே உயிரைப் பணயம் வைத்திருக்கின்ற ஒரு எழுத்தாளரை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் இந்தப் போலிகளை மேலும் தெளிவாக இனம் காண முடியும்.

அயோத்தி மசூதி இடிப்பின் தொடர்வினையாக பம்பாயில் நடத்தப்பட்ட 'கலவரத்தை'ப் பின்புலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திரைப்படம் பம்பாய். மசூதி இடிப்பின் எதிர்வினையாக வங்காள தேசத்தில் நடத்தப்பட்ட கலவரத்தைப் பின்புலமாகக் கொண்டு தஸ்லிமா நஸ்ரீன் எழுதிய நாவல் லஜ்ஜா (அவமானம்).

அங்கே லஜ்ஜா நாவலை எழுதியதற்கு தண்டனையாக இசுலாமிய மதவெறியர்கள் தஸ்லிமாவின் தலைக்கு விலை வைத்தனர். (குரானை அவமதித்ததற்காக விதிக்கப்பட்ட மரண தண்டனை இதற்குப் பிறகு நடந்தது). இங்கே பம்பாய் திரைப்படத்திற்காக மணிரத்தினத்தின் மீது தாக்குதல் - ஒப்புமைகளை மேம்போக்காகத் தேடுவதென்றால் இப்படியும் கூறிவிடலாம்.

ஆனால் தஸ்லிமாவின் 'அவமானம்' வங்காள தேசத்தின் பெருமிதம். மணிரத்தினத்தின் 'பம்பாய்' இந்தியாவின் அவமானம்.

இதைப் புரிந்து கொள்ள 'லஜ்ஜா'வின் கதைச் சுருக்கத்தையாவது தெரிந்து கொள்வது அவசியம்.

●

பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்குப் பழி வாங்கும் நோக்கத்தில், வங்கதேசத்தில் சிறுபான்மையினரான இந்துக்கள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள் இசுலாமிய மதவெறியர்கள்.

வங்கதேசத்தின் விடுதலைக்காகப் போராடியவரும், மனிதநேயக் கோட்பாட்டாளரும், நாத்திகருமான சுதாமோய் என்ற மருந்துவரின் மகள் இக்கலவரத்தில் காணாமல் போகிறாள். தன்னைச் சுற்றி நடக்கின்ற சம்பவங்களும், தனது அன்புச் சகோதரியின் இழப்பும் சுதாமோயின் மகன் சுரஞ்சனை விரக்தியடைய வைக்கின்றன.




அவனுடைய முஸ்லீம் நண்பர்கள் இந்த அநீதிக்கெதிராகப் போராடுவார்கள் என்று எதிர்பார்த்து அவன் ஏமாந்து போகிறான். மனிதாபிமானியாகவும் மதநம்பிக்கையற்ற வனாகவும் தனது தந்தையால் வளர்க்கப்பட்ட அந்த இளைஞனின் மனதில் மெல்ல மெல்ல முஸ்லீம்கள் மீதான கசப்புணர்வு தோன்றுகிறது. சொந்த சகோதரியின் இழப்பு அவனை இந்து மதவெறியனாகவே மாற்றுகிறது. ஆனால் அவனது தந்தையோ நம்பிக்கை இழக்கவில்லை.

நாவலின் இறுதிப் பகுதியில் தந்தைக்கும் மகனுக்கும் நடக்கும் உரையாடல் இது:

''மகன்: அப்பா, உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். வாருங்கள், நாம் போய் விடலாம்.

தந்தை: எங்கே?

மகன்: இந்தியாவிற்கு...

தந்தை: இந்தியாவா? (மகன் தன்னை ஏதோ தகாத வார்த்தைகளால் ஏசிவிட்டதைப் போல அதிர்ச்சியடைகிறார்)... உனக்கு வெட்கமாக இல்லை? இந்தியா உன் அப்பனின் நாடா, பாட்டனின் நாடா?... உன் தாய்நாட்டை விட்டு ஓடிப் போகிறேன் என்று சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை?

மகன்: என்ன தாய்நாடு பெரிய தாய்நாடு? இந்த நாடு உங்களுக்கு என்ன செய்திருக்கிறது?... என் தங்கைக்கு என்ன செய்தது? அம்மா ஏன் இப்படி அழ வேண்டும்? நீங்கள் ஏன் இரவு முழுவதும் பெருமூச்சு விடுகிறீர்கள்? நான் ஏன் தூங்க முடியவில்லை?

தந்தை: மகனே, கலவரம் என்பது எல்லா நாடுகளிலும்தான் நடக்கிறது. இந்தியாவில் நடக்கவில்லையா? அங்கேயும் மக்கள் சாகவில்லையா?...

மகன்: இது கலவரம் என்றால் நானும் ஒத்துக் கொள்வேன். ஆனால் இது கலவரமல்ல. இந்துக்களை முஸ்லீம்கள் கொல்கிறார்கள் அவ்வளவுதான்.

தந்தை: அப்படியானால் நீ உன்னை ஒரு இந்து என்று சொல்லிக் கொள்கிறாயா?

மகன்: நாம் நம்மை நாத்திகர்கள் என்று சொல்லிக் கொண்டாலும், மனிதநேயவாதிகள் என்று சொல்லிக் கொண்டாலும் அவர்கள் நம்மை இந்து என்றுதான் சொல்கிறார்கள்... அவர்களை நம்ப முடியாது... வாருங்கள், போய் விடுவோம்...

தந்தை: முடியாது, நான் வரமாட்டேன், நீ வேண்டுமானால் போ.''

ஆனால் அந்தத் தந்தையின் மலை போன்ற உறுதி மறுநாள் விடிவதற்குள் நொறுங்கி விடுகிறது. இரவு முழுவதும் அவருக்குள் நடைபெற்ற மனப்போராட்டத்தின் முடிவில், அவமானத்தால் குறு

> மணிரத்தினத்தைப் போலவே தஸ்லிமாவும் தன் நாவலைமுஸ்லிம் மதவெறித் தலைவர்களிடம் தணிக்கைக்குச் சமர்ப்பித்திருந்தால், 'பம்பாய்' அளவுக்கு கோடி கோடியாய் சம்பாதிக்க முடியாவிட்டாலும் தனது உயிருக்காவது உத்திரவாதம் தேடிக்கொண்டிருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

கிப் போய் உடைந்த குரலில் தன் மகனை அழைக்கிறார்: ''வா... மகனே, நாம் போய்விடுவோம்... இந்தியாவுக்கு''

●●●

மதவெறியர்களைச் சாடுவதைக் காட்டிலும் அவர்களை எதிர்க்கத் துணியாத பெரும்பான்மை (முஸ்லீம்) மதத்தினரின் கோழைத்தனத்தைத்தான் சாடுகிறது லஜ்ஜா.

''பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து எனது நாட்டின் இந்துக்கள் முஸ்லீம்களால் வேட்டையாடப்பட்டது பெரும் இழிவு ஆகும். வங்காளதேசத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் இதற்காக வெட்கப்பட வேண்டும்... 1992-இல் நடந்த இக்கலவரங்களுக்கு நாம் அனைவருமே பொறுப்பு. நாம்தான் குற்றவாளிகள். நம்முடைய கூட்டுத் தோல்வியைப் பதிவு செய்யும் ஒரு ஆவணம்தான் இந்த நாவல்'' என்று தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார் தஸ்லிமா நஸ்ரீன்.

1993 பிப்ரவரியில் இந்நாவல் வெளிவந்தது. உடனே 60,000 பிரதிகள் விற்றுவிட்டன. ஆனால், மத நல்லிணக்கத்தை இந்நாவல் சீர்குலைப்பதாகக் கூறி 5 மாதங்களுக்குப் பின் இந்நூலுக்குத் தடை விதித்தது வங்காள தேச அரசு. தஸ்லிமாவைக் கொலை செய்வோம் என்று கூச்சலிட்டபடி டாக்காவில் மதவெறியர்கள் ஊர்வலம் நடத்தினர். தஸ்லிமாவைக் கொலை செய்பவருக்கு பரிசுத் தொகை அறிவித்து செப்டம்பர் மாதத்தில் ஒரு இசுலாமியக் கடுங்கோட்பாட்டு வாத அமைப்பு ஆணை பிறப்பித்தது. ஆனால் இவையெதையும் கண்டு தஸ்லிமா மனம் தளரவில்லை. மன்னிப்பும் கேட்கவில்லை.

ஏழே நாட்களில் எழுதி முடிக்கப்பட்ட இந்நாவல் பெரிதும் பிரபலமடைந்ததுவிட்ட போதிலும் இலக்கியத்தரம் வாய்ந்ததல்ல என்று விமரிசிக்கும் இந்திய எழுத்தாளர்களும் உண்டு. ஆனால் நாவலின் தரம் எழுத்தாளரின் நேர்மையிலும், அது வெளியிடப்பட்ட தருணத்திலும்தான் இருக்கிறது.

அரசியல் சட்டப்படியே தன்னை 'இசுலாமிய நாடு' என்று அறிவித்துக் கொண்ட ஒரு நாட்டிலிருந்து இசுலாமிய மதவெறிக்கு எதிரான வெளிவந்துள்ள இலக்கியம் இது.

'நாடி நரம்பெல்லாம் மதசார்பின்மை குடிகொண்டிருக்கும்' இந்தியாவில், பம்பாய் படுகொலைக்கு எதிராக வெளிவந்த இலக்கியங்கள் எத்தனை? சிவசேனாவுக்கும், ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கும் எதிராக எழுதி தன் உயிரைப் பணயம் வைத்து நிற்கும் எழுத்தாளர்கள் எத்தனை பேர்?

அங்கே தஸ்லிமா - இங்கே மணிரத்தினம். முஸ்லீம் மக்களுக்கெதிராக சிவசேனா திட்டமிட்டு நடத்திய படுகொலையை 'இந்து - முஸ்லீம் கலவரமாக'த் திரித்து விட்டார் மணிரத்தினம். இந்தத் திரிக்கப்பட்ட வரலாறு நூறு நாட்களுக்கு மேல் ஓடி மக்களின் சிந்தனையை நஞ்சாக்கி வருகிறது.

''தந்தையே, இது கலவரமல்ல, இந்துக்களை முஸ்லீம்கள் கொல்கிறார்கள், அவ்வளவுதான்'' என்று சுரஞ்சனின் வாயிலாகப் பேசும் தஸ்லிமாவின் குரல் நம்மை வெட்கித் தலைகுனிய வைக்கிறது.

பம்பாய் எனும் திரைப்படத்தின் தரத்தை ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அதன் வரலாற்றுப் புரட்டை மட்டுமாவது கண்டிக்கின்ற நாணயமும், துணிவும் அற்றுப்போன அறிவுஜீவிகளின் தரத்தை உரைத்துக் காட்டுவதே நமது நோக்கம்.

கண்டிப்பது இருக்கட்டும், பம்பாய் சித்தரிக்கும் 'பஞ்சு மிட்டாய் நல்லிணக்கத்தில்' மனதைப் பறிகொடுத்த முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இயக்குனருக்கு ஒரு பாராட்டு விழாவே நடத்திவிட்டது. அந்த வகையில் தாக்கரேயாலும், 'மார்க்சிஸ்டு'களாலும் ஒரே நேரத்தில் பாராட்டப்படும் பெருமையை மணிரத்தினம் பெற்று விட்டார்.

'நாடி நரம்பெல்லாம் மதசார்பின்மை குடிகொண்டிருக்கும்' இந்தியாவில், பம்பாய் படுகொலைக்கு எதிராக வெளிவந்த இலக்கியங்கள் எத்தனை? சிவசேனாவுக்கும், ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கும் எதிராக எழுதி தன் உயிரை பணயம் வைத்து நிற்கும் எழுத்தாளர்கள் எத்தனை பேர்?

தாக்கரேயிடம் அனுமதி பெற்று படத்தை வெளியிடும் 'பண்பாட்டை' விமரிசிப்பதற்குக் கூட ஒரு ஷபனா ஆஸ்மிதான் வேண்டும் என்ற நிலைமை நமது மதசார்பின்மையின் வலிமைக்கு இன்னொரு சான்று.

தங்களது படைப்புச் சுதந்திரத்தில் வரம்பு மீறித் தலையிடும் தணிக்கைக்குழுவின் அடாவடித்தனத்திற்கெதிராக ஊர்வலம் போன இயக்குனர்களுக்கோ, நடிகர்களுக்கோ இந்த 'ஒரு நபர் உயர் மட்டத் தணிக்கைக்குழு' ஏன் கோபத்தை ஏற்படுத்தவில்லை? அச்சமா?

இயக்குநரின் மனதில் அச்சத்தைத் தோற்றுவிப்பதன் மூலம், தான் நினைத்ததைச் சாதிக்க சிவசேனாவால் முடியும் என்றால், எதிர்த்தரப்பும் அதே வழிமுறையைப் பின்பற்ற நினைப்பதில் வியப்பென்ன இருக்கிறது?

இயக்குனர் மணிரத்தினத்தைப் போலவே தஸ்லிமாவும் தன் நாவலை முஸ்லீம் மதவெறித் தலைவர்களிடம் தணிக்கைக்குச் சமர்ப்பித்திருந்தால், 'பம்பாய்' அளவுக்கு கோடி கோடியாய் சம்பாதிக்க முடியாவிட்டாலும் தனது உயிருக்காவது உத்திரவாதம் தேடிக் கொண்டிருக்கலாம்.

மதசார்பற்ற கட்சிகளின் கீழ் சிறுபான்மை மதத்தினர் எந்த அளவுக்குத் திரண்டிருக்கிறார்கள் என்பதை ஒரு நாட்டில் மதசார்பின்மைக் கொள்கையின் வெற்றிக்கு ஒரு அளவு கோலாகக் கொள்ளலாம். ரம்ஜானுக்கு வாழ்த்துக் கூறுவதன் மூலமும், தேர்தலுக்கு குல்லாய் அணிந்து ஓட்டு கேட்பதன் மூலமும் முஸ்லீம் ஓட்டு வங்கியைப் பராமரிக்க எண்ணுபவர்கள் அவர்களது உண்மையான பிரச்சினைகள் குறித்துப் பேசுவதுமில்லை; தவறுகளை விமரிசிப்பதுமில்லை.

ஆனால் குல்லாய் போடுவதில் நம்பிக்கையில்லாத 'மக்கள் கலை இலக்கியக் கழகம்' பம்பாய் திரைப்படத்தின் புரட்டுக்கெதிராக சென்னையிலும், திருச்சியிலும் ஆர்ப்பாட்டம் நடத்தியது. திருச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளத் திரண்டு வந்த சுமார் 100 முஸ்லீம் இளைஞர்களை வழியிலேயே தடுத்துத் திருப்பி அனுப்பியது காவல்துறை. பொதுவுடைமைக் கொள்கையிலும், ஷரியத் மற்றும் முஸ்லீம் மதவாதத்திற்கெதிரான எமது கருத்துக்களிலும் அந்த இளைஞர்களுக்கு எள்ளளவும் உடன்பாடு கிடையாது என்பதை இந்த இடத்தில் நினைவிற் கொள்ள வேண்டும்.

தங்களுக்கிழைக்கப்பட்ட அநீதிக்கெதிராக ஒரு மதசார்பற்ற அமைப்பின் கீழ் நின்று குரல் கொடுக்க வந்த இளைஞர்களைத் திருப்பியனுப்பியதன் மூலம் அவர்களை மீண்டும் மதவாதிகளின் கையிலேயே காவல்துறை ஒப்படைத்து விட்டது. மதசார்பற்ற அமைப்புகளோ தங்களது சந்தர்ப்பவாத அமைதியின் மூலம் முஸ்லீம் மக்களை மதவாதிகள் கையில் ஒப்படைக்கின்றனர்.

ஐதராபாத்திலும், பம்பாயிலும், மத்தியப் பிரதேசத்திலும் இப்படத்துக்கெதிராகக் கிளர்ச்சி செய்தவை முஸ்லீம் அமைப்புகள்தான் என்பதே உண்மை; அவமானகரமான உண்மை.

எனவே, குண்டு வெடிப்புக்கான காரணத்தை காவல்துறையினர் எமது விமரிசனத்தில் தேடவேண்டாம்; மதவெறிக்கு எதிராகத் தடுப்பு ஊசி போட்டுக் கொண்ட தமிழ்நாட்டின் அறிஞர் பெருமக்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய பொருள் பொதிந்த மவுனத்தில் தான் தேடவேண்டும்.

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை-600 031.

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.N.42647/87 REGD.NO.TN/MS(S) 637

## ஒழுக்கம்

"மாரி சூதாடி சார்; பொழுதுக்கும் மங்காத்தா விளையாடுவான். ("அவன் ஒரு குடிகாரன்" - அதையும் சொல்லு என்று கிசுகிசுக்கிறார் பக்கத்திலுள்ளவர்)

— மேல்சாதியினர்.

— ● —

"ராஜன் பிள்ளை ஒரு கிரிமினல் அல்ல; அவரது குற்றம் நிரூபிக்கப்படவில்லை. அவர் மீது விசாரணை நடக்கிறது. அவ்வளவுதான்."

கோடிக்கணக்கில் நிதிமோசடி செய்து கைது செய்யப்பட்ட தொழிலதிபர் ராஜன் பிள்ளையின் மரணத்தை ஒட்டி சிறை மற்றும் நீதித் துறையைக் கண்டித்து 'இந்தியா - டுடே' எழுதிய தலையங்கம்.

## உறவு முறை

"நம்மாளு (பறயர்) அருந்ததியினர் (சக்கிலியர்) வீட்ல சாப்பிடுவானா? அப்புறம் வன்னியர் வீட்ல மட்டும் நாம சாப்பிட முடியுமா?... ஒரு தகராறும் கிடையாது சார். எல்லாம் மாமன், மச்சான் முறை வச்சித்தான் கூப்டுக்குவோம். இவுனுக ஒருத்தனுக்கொருத்தன் அடிச்சிகிட்டு ஊர் கவுண்டர் கிட்டதான் பஞ்சாயத்துக்கு வருவானுங்க. கால்ல உழுந்து கும்பிட்டுட்டுப் போவானுங்க"

— ராஜு, அதிமுக வட்டச் செயலாளர், செங்கல் சூளை முதலாளி, தாழ்த்தப்பட்டவர்.

— ● —

"எல்லாமே அண்ணன் தம்பிதான் குப்பனும் சுப்பனும் உற(வு)முறைதான்"

— 'சின்னக் கவுண்டர்' - படப்பாடல் - பாடியவர் இளையராஜா.

## தனம் கண் பறிப்பு:

## வாக்கு

⇩

## மூலம்

## நாகரீகம்

"அவன் (தனத்தின் தந்தை மாரி) நாகரீகங்கெட்ட பய சார். வாத்தியாரு கிட்ட போய் பேசுறப்ப கூட சட்டை வேட்டி இல்லாம கோவணத்தோட போய் நின்னு பேசுவான்."

— மேல்சாதி இளைஞர்கள்

— ● —

சினிமா பாக்கப் போகையில பாண்ட், சட்டை, ஷூ போட்டு தனியாப் போனா பிரச்சினைங்க. என்னடா பந்தா பண்றியான்னு கேலி பண்ணுவாங்க. நேர்ல கூப்பிட்டு மிரட்டுவாங்க.

— மாரிமுத்து, தாழ்த்தப்பட்ட இளைஞர்

## பழக்கம்

சாமி... சாமின்னு கூப்பிட்டே பழக்கமாப் போச்சு சாமி. மாத்திக்க முடியல சாமி, (பேட்டி எடுக்கச் சென்ற நமது நிருபர் தன்னை சாமி என்று அழைக்க வேண்டாமென்று கூறியதற்கு சிறுமி தனத்தின் பாட்டி அளித்த பதில்)

— ● —

எல்லாரும் கையேந்திதான் சார் தண்ணி குடிப்போம். இது ஒண்ணும் புதுசு இல்ல; ரொம்ப நாளா இதுதான் சார் பழக்கம்.

— மேல்சாதி இளைஞர்கள்

## அறியாமை

".....
சாதியும் சாமியும் சாராயம் போல்
சந்தைக் கடையில் விற்குது காண்
சர்க்கார் எத்தனை மாறிவந்தாலும்
மாறா வர்ணம் நாலும் காண்...
— செல்வி தனத்திற்கு மேலேயுள்ள கவிதை புரியாது. அது புரியாமலே இருக்க வேண்டுமென்பதே என் ஆசை."

—'தேவர் மகன்' புகழ் கமல்ஹாசன் எழும்பூர் கண் மருத்துவ மனையில் தனத்திடம் கொடுத்த கவிதை யிலிருந்து (ரூ.10,000 தனி)

— ● —

சம்பவம் பற்றி நேரில் விசாரணை செய்ய வந்த மாவட்ட ஆட்சியரும் அதிகாரிகளும் அந்த இரண்டாம் வகுப்புப் பிள்ளைகளைப் பார்த்துச் சொன்ன முதல் வாக்கியம்: "எஸ்.சி.யெல்லாம் தனியா நில்லு; எம்.பி.சி.யெல்லாம் தனியா நில்லு." புரிய வைக்கப்பட்ட குழந்தைகள் தனித்தனியே பிரித்து நிறுத்தப்பட்டார்கள்.

— நேரில் திரட்டிய செய்தி

## "நீரே சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறீர்"

**— அல்லேலூயா!**

"தனத்திற்கு ஒரு சிறந்த ஆங்கிலப் பள்ளியில் இலவசக் கல்வியும், மாரிக்குத் தோட்ட வேலையும், ஒரு வீடும் அளிக்கப்படும். ஊருக்குப் போய் அவர்கள் பதட்டத்தில் வாழ வேண்டியதில்லை"

— சென்னை ஆயர்

— ● —

திருச்சி நகரில் உள்ள கிறித்தவ இடுகாட்டில் தாழ்த்தப்பட்டோர் புதைக்கப்படும் இடத்தையும் மேல்சாதியினர் புதைக்கப்படும் இடத்தையும் பிரிக்க ஒரு நீண்ட மதில் சுவர் இன்றும் இருக்கிறது.

— செய்தி

## பணமா - பாசமா

"எல்லாம் சும்மா சார்; அவன் பொண்ணு கண்ணை வச்சி லட்சலட்சமா சம்பாதிக்கப் பாக்கிறான் சார். சம்பாரிக்கட்டும்"

— மேல்சாதி இளைஞர்கள்

— ● —

"ரெண்டாவதும் பொட்டப்புள்ள (தனம்); 'அது என்னாத்துக்கு, கொன்னுருன்னு சொன்னேன். அவந்தான் (மாரி) "கொல்றதுன்னா முதல்ல எங்கள வெசம் வச்சு கொல்லுன்னு" கோவிச்சுகிட்டு ஏழு வருசமா என் வூட்டு படியேர்றதில்ல"

— தனத்தின் பாட்டி (மாரியின் அம்மா)

## விமரிசனம் சுய-விமரிசனம்

சிறுமி தனத்தின் மீதான தீண்டாமைக் கொடுமையை, மார்க்சிஸ்டு கட்சி பிரமுகர்களும், மாணவர் - விவசாய சங்கங்களும் கடுமையாக **விமரிசனம்** செய்து அறிக்கை வெளியிட்டனர்.

— ● —

ஆனால் மார்க்சிஸ்டு தலைமையிலான தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, ஆசிரியர் சுப்பிரமணியை கண்டித்து எதுவும் அறிக்கைவிடவில்லை. சுப்பிரமணிக்கு ஆதரவாக போராடப் போவதாக முத்துசாமி தலைமையிலான ஆசிரியர் கூட்டணி அறிவித்தபோது அதையும் கண்டிக்கவில்லை. இது குறித்து மார்க்சிஸ்டு சங்க செயலர் லோகேசுவரனை நேரில் கேட்டபோது சொன்னார்: "நேரில் சென்று விசாரிக்க குழு அமைத்துள்ளோம். இதை தாமதமாக செய்வதற்கு **சுயவிமரிசனம்** ஏற்கிறோம்."

படிப்பகம்